விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 25 திங்கட்கிழமை (08.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

## உணவகத்தினுள் வாள்வெட்டு

### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் அமைந்துள்ள உணவு 24

## வாகன விபத்து; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பலாலி வீதியில் நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் 23

## இலங். கொடியுடன் நடுக்கடலில் எல்லை

(சென்னை)

எல்லைத் தாண்டி மீன்பிடிப்பதை தடுக்கும் வகையில். இலங்கை அரசாங்கத்தினால் நடுக்கடலில் எல்லைப் பலகை வைக் 24

# நினைத்த நேரத்தில் ஆட்சியை கவிழ்ப்பேன்

## காலம் கனிந்து விட்டது என மகிந்த இறுமாப்பு

(கொழும்பு)

நான் நினைத்த நேரத்தில் ஆட்சியை கவிழ்க்க முடியுமான சூழல் தற்போது நாட்டில் தோன்றி யுள்ளது. ஆகவே சரியான நேரத்தில் ஆட்சியை நாம் கைப்பற்றுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(23-ம் பக்.)

## நீர் மட்டம் குறைவடைவு

(கொழும்பு)

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 34 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் மழை பெய்கின்ற போதிலும், 24

## முன்னாள் பெண் போராளி சடலமாக மீட்கப்பட்டார்!

(செங்கலடி)

மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் முன்னாள் பெண் போராளி ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செங்கலடியைச் சேர்ந்த 6 வயது குழந்தையின்தாயாரான யோகேந்திரன் ரமணி என்ற குடும்பப் பெண்ணே தாக்கிட்டு தற் கொலை செய்துள்ளார்.

பிரஸ்தாப பெண்ணின் கண 23

## MAJESTIC CINEPLEX

### கார்கில்ஸ் கட்டடத்தொகுதி திரையரங்கில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்

### பாகுபலி பார்க்கச் சென்றவர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் கட்டடத்தொகுதியில் இயங்கும் மஜிஸ்ரிக் திரையரங்கின் நிர்வாகத்தில் மிகப்பெரிய குழப்பங்கள் இருப்பதாக மக்கள் குறைபட்டுள்ளனர்.

"பாகுபலி 2" படம் திரையாகி வருகின்ற இவ் வேளையில் அங்கு கூடுகின்ற மக்களை மிக மோசமாக மஜிஸ்ரிக் நிர்வாகம் நடத்துவதாக வும் திரைப்படம் ஆரம்பமாகும் நேரங்கள் பற் றியோ ரிக்கட் எடுப்பதற்காக மக்கள் 23

### ஐ.நா மனித உரிமை பேரவையில்

## இலங்கை தொடர்பில் ஜூன் 12-ல் விவாதம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 35 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் ஜூன் மாதம் 06ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை தொடர்பான விவாதம் ஒன்று எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ, இலங்கை குறித்து சமர்ப்பித்துள்ள 23

### யாழ்.பல்கலைக்கழக சூழலில்

## வெசாக் வெளிச்ச கூடுகள்; மாணவர்களிடையே மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக சூழலில் வெசாக் தினத்திற்காக வெளிச்சக் கூடுகளைக் கட்டமுயன்ற புதுமுக மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டமையினால் நேற்றைய தினம் பல்கலைக்கழக சூழலில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

வெசாக் தினத்தினை முன்னிட்டு பௌத்த மதம் சார்ந்த புதுமுக மாணவர்கள் வெளிச்சக் கூடுகளைத் தயார் செய்து அதற்கான மேலதிக அலங்காரத்தை யாழ். பல்கலைக்கழக சூழலில் மேற்கொள்ள முயன்றனர்.

இவ்வாறு புதுமுக 02

## இலஞ்சம் பெற்ற அரச அதிகாரிகள் 21 பேர் கைது!

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 21 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி காலப்பகுதிக்குள் இலஞ்சம் பெற் றுள்ளதாக 25 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் 16 சுற்றுவளைப்பு 24

## மறிச்சுக்கட்டி, மாவில்லு குறித்த வர்த்தமானி தவறுகள் திருத்தம்

### உயர்மட்ட மாநாடு ஜனாதிபதி தலைமையில்

(கொழும்பு)

மறிச்சுக்கட்டி, மாவில்லு குறித்து புதிய வர்த்தமானியில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் தவறுகளை திருத்துவது தொடர்பாக உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில் இந்த மாநாடு கூட்டப் படவுள்ளது என முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

முசலியில் முஸ்லிம்களுக்குரிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் 24

## வெடிபொருட்கள் மேலும் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மயிலிட்டி வடக்கில் உள்ள தனியார் காணியில் மேலும் ஒரு தொகுதி வெடிபொருட்கள் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன.

மயிலிட்டி வடக்கு பகுதியில் உள்ள 24

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க பாரிய மக்கள் போராட்டம்

### ஜனநாயக போராளிகள் கட்சி

24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வெசாக்-வெளிச்ச...

மாணவர்கள் குறித்த அலங்காரத்தை மேற்கொள்ள முயல்வதனையறிந்த சிரேஷ்ட மாணவர்களில் உள்ள பௌத்த மாணவர்கள் குறித்த அலங்காரத்தினை தாமே மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

இதனால் குறித்த விடயத்தில் சர்ச்சை ஏற்படவே இரு தரப்பும் இணைந்து குறித்த நிகழ்வினை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் சில சிரேஷ்ட மாணவர்கள் தாமே அலங்காரங்களை மேற்கொள்ள வேண்டும் என கூறியுள்ள நிலையில் நேற்று மாலையில் புதுமுக மாணவர்கள் இப்பணியை மேற்கொள்ள முயன்றுள்ளனர். இதற்காக பல வெளிச்சக் கூடுகளையும் அவர்கள் தம்மோடு கொண்டு வந்தனர். இதன்போது அவ்விடத்திற்கு வந்த சிரேஷ்ட மாணவர்கள் கொதிப்படைந்து புது முக மாணவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. பின்னர் சமரசத்துடன் அப்பகுதியை விட்டு மாணவர்கள் கலைந்து சென்றுள்ளனர். (செ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி பகுதியைச் சேர்ந்த
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்
வடக்கு மாகாண சபை
உறுப்பினராக இருந்து
தற்போது யாழ்மாவட்ட
அமைப்பாளராக
ஜனாதிபதியினால் தெரிவு
செய்யப்பட்ட **சிவக்கொழுந்து**
**அகிலதாஸ்** அவர்களை
தென் கருணையூர் அருள்மிகு
முருகையா கோவில்
பரிபாலன சபை உறுப்பினர்கள்
யாபேரும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் மேன்மேலும் வளர இறைவனை
வேண்டிக்கொள்கின்றோம்.

**தென் கருணையூர் அருள்மிகு**
**முருகையா கோவில் பரிபாலன சபை**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

(சி-8500)



முதலாம் ஆண்டு நினைவுகள்

மலர்வு 29 - 08 - 1928

உதிர்வு 19 - 04 - 2016

ஸ்ரீமான்

**நாகநாதர் சிவசுப்பிரமணியம்**

(மண்டைதீவு கடையிற் சுவாமிகள் நினைவாலய தர்மகர்த்தா)

ஆண்டுகள் அகன்றாலும் அகலாது
மீண்டிடும் உங்கள் நினைவுகள் நிழலாக
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உம் வாழ்வு
வியாபித்து நிற்கும் ஆலமர விழுதுகளாய்!

சிறுப்புலம், மண்டைதீவு.

குடும்பத்தினர்
வராகி அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு.

(C-8511)



வாழ்த்தி வரவேற்கின்றோம்



வலிகாமம் வடக்கு பிரதேச செயலராக
இன்று (08.05.2017) திங்கட்கிழமை
பதவியேற்கின்ற கௌரவத்திற்குரிய
எங்கள் பிரதேச செயலர்
**உயர்திரு**
**சண்முகராஜா சிவஸ்ரீ** அவர்களை
எமது பிரதேச மக்கள்
சார்பாக மனமார
வாழ்த்தி வரவேற்கின்றோம்.

**தங்கள் சேவையை வரவேற்கும்**
**அளவெட்டி மக்கள்**

(சி-8510)

# நாட்டின் புராதனச் சின்னங்களை அழிப்பது பயங்கரவாதச் செயல்

## புதிய சட்டத்தில் உள்ளடக்கம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க சின்னங்களை அழிப்பது, திருத்தப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் 20 வருடங்களுக்குக் குறையாத தண்டனை பெறும் குற்றச்செயல் எனவும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்படும் ஒருவரின் உடைமைகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

74 பக்கங்களை கொண்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவில் பல புதிய குற்றங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு குற்றவாளியாக அடையாளம் காணப்படுபவர்களுக்கு 20 வருடங்களுக்கு குறையாமல் சிறைத்தண்டனை மற்றும் அவர்களின் அனைத்து சொத்துக்களும் அரசுடைமையாக்கப்படும்.

இதனை தவிர இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்த முயற்சிப்பது மற்றும் செயற்படுவது குற்றமாகும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்க இரகசியங்களை வெளிப்படுத்துவது தண்டனைக் குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. விமானத்தில் கடத்தல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை பயங்கரவாத குற்றங்களாகும். இந்த புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத செயற்பாடுகளை விசாரிப்பதற்காக பொலிஸ்மா அதிபருடனான பயங்கரவாத எதிர்ப்பு நிறுவனம் நிறுவ வேண்டும். அதற்கு விசேட விசாரணை குழு ஒன்றை உள்ளடக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக பயங்கரவாத செயற்பாடு தொடர்பில் கைது செய்யப்படுபவர்கள் குறித்து இந்த நாட்டுமனித உரிமை ஆணைக்குழுவில் உடனடியாக அறிவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## அரபு நாடுகளின் ஆதரவை திரட்டும் முயற்சியில் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மூன்று அரபு நாடுகளின் தூதுவர்கள் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சந்திப்பில் இலங்கையில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பிலும் மகிந்த ராஜபக்ஷவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையுடன் மிக நெருக்கமாக இருந்து தற்போது நல்லாட்சியால் சற்று தூரமாக்கப்பட்டுள்ளதும் யுத்தத்தின் போது இலங்கைக்கு பலவித்திலும் உதவிய ஒரு முஸ்லிம் நாட்டு தூதுவரும் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். (இ-7)

## கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவளிக்கும் மாகாண அமைச்சர்களுக்கு ஆபத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியனவற்றின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் கூட்டு எதிர்க்கட்சிக்கு நேரடியாக உதவிகளையும் ஆதரவினையும் வழங்கி வரும் நான்கு மாகாண அமைச்சர்கள் பதவியை இழக்கவுள்ளனர். கட்சிக்கு எதிராக செயற்படுவோரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சி தலைமை தீர்மானித்துள்ளது.

வட மத்திய மாகாண அமைச்சர்களான கே.எச். நந்தசேன, எச்.பி. சேமசிங்க மற்றும் எஸ்.எம். ரஞ்சித் ஆகியோரும் தென் மாகாண அமைச்சர் வீரசுமன வீரசிங்க ஆகியோரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட உள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தின் போது இந்த மாகாண அமைச்சர்கள் நேரடியாகவே கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவினை வழங்கியிருந்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த மாகாண அமைச்சர்கள் தொடர்ந்தும் பதவி வகிப்பதனால் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் பாதக நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால் குறித்த அமைச்சுப் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறித்த உறுப்பினர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சரத் பொன்சேகாவால் ஐ.தே.கவுக்குள் பிளவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு கட்சியில் உயர் பதவி வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான விஜயதாஸ ராஜபக்ச மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இந்தக் கூட்டத்தில் சரத் பொன்சேகாவிற்கு கட்சியின் துணைத் தலைவர் என்ற பெயரில் பதவியொன்று வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பதவி வழங்கப்படுவதற்கு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். பதவி வழங்குவது தொடர்பில் கட்சிக்குள் பிளவு நிலை ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் பகிரங்கமாகவே எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இன்று நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஹரின் பங்கேற்க மாட்டார் எனவும், மகியங்கன பிரதேசத்தில் நடைபெறவுள்ள சமய நிகழ்வு ஒன்றில் பங்கேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெலிமட பிரதேசத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போதும் ஹரின் விஜயத்தில் இணைந்து கொள்ளவில்லை, மேதினக் கூட்டத்தில் உரையாற்றவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை வொக் பௌர்ணமி தினத்தின் பின்னர் கடுமையான தீர்மானம் ஒன்றை எடுக்கப் போவதாக விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைக் கடல் எல்லையில் சீன கப்பல் மீது துப்பாக்கிப்பிரயோகம்

### பாதுகாப்பு அமைச்சு நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லையில் சீன கப்பலுக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக வெளியாகும் செய்திகளை நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய இணையத்தளங்கள் மாத்திரம் இந்த சம்பவம் தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அந்த தகவலை அடிப்படையாக கொண்டு குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் ஏற்றுக் கொள்ள கூடிய தகவல்கள் ஒன்றும் பதிவாகவில்லை என பாதுகாப்பு செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சீன கப்பல் ஒன்றுக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் இலங்கை கடல் எல்லைக்குள் இடம் பெற்றுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 15 பந்துகளில் அரைச்சதம் அடித்தார் நரேன்

# பெங்களூரை இலகுவாக வீழ்த்தியது கொல்கத்தா



சுனில் நரைன் அதிவேக (15 பந்து) அரைச் சதம் அடித்து சாதனை படைக்க, கொல்கத்தா அணி 29 பந்துகள் மீதமிருக்க 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரை இலகுவாக வீழ்த்தி பிளே ஃஒப் சுற்று வாய்ப்பை உறுதி செய்தது.

10ஆவது ஐ.பி.எல்., தொடரின் 46ஆவது லீக் போட்டி பெங்களூருவில் நேற்று நடை பெற்றது.

இப்போட்டியில் பெங்களூர் - கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் கௌதம் கம்பீர் முத லில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி களமிறங்கிய பெங்களூர் அணிக்கு உமேஷ் யாதவ் தொல்லை தந் தார். இவரது 'வேகத்தில்' கெய்ல் (0), அணித் தலைவர் ஹோலி (2) சிக்கினர். டி வில்லி யர்ஸ் 10 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மன்தீப் சிங், டிராவிஸ் ஹெட் இணை சிறப்பாக செயல்பட்டு பெங்களூரை சரிவில் இருந்து மீட்டது. இருவரும் அரைச் சதம் கடந்தனர். நரைன் 'சுழலில்' மன்தீப் (52) ஆட்டமிழந்தார். மற்றையவர்கள் ஏமாற்ற, பெங்களூர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்கள் எடுத்தது.

ஹெட் (75) ஆட்டமிழக்காமல் இருந்தார். கொல்கத்தா சார்பில் அதிகபட்சமாக உமேஷ் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

### நரைன் அபாரம்

பின் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு கிறிஸ் லின் - நரைன் ஜோடி அதிரடியான ஆரம்பம் கொடுத்தது.

சவுத்ரியின் முதல் ஓவரில் லின் இரண்டு பவுண்டரி, ஒரு சிக்ஸர் விளாசினார். தன் பங்குக்கு அரவிந்த் வீசிய 5ஆவது ஓவரில் நரைன் நான்கு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்தார். இதன் மூலம், ஐ.பி.எல்., அரங் கில் குறைந்த பந்தில் (15) அதிவேக அரைச் சதம் அடித்த சக வீரரான யூசுப் பதான் சாத னையை சமன் செய்தார்.

நரைன் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். லின் (50) அரைச் சதம் எட்டினார். நேகி பந்தில் கிராண்ட்ஹோம் (31) சிக்கி னார். கம்பீர் (14) ஏமாற்றியபோதும்,

கொல்கத்தா 15.1 ஓவர்களில் 4 விக் கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

மணிஷ் பாண்டே (4), யூசுப் பதான் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடி யில் ஜொலித்த கொல்கத்தாவின் நரைன் தெரிவானார்.

## புனே சுப்பர்ஜெயன்ட், குஜராத் லயன்ஸ் அணிகளுக்கு நீட்டிப்பு கிடையாது - சுக்லா

இரண்டு வருடமாக ஐ.பி.எல். தொடரில் இடம்பிடித்துள்ள ரைசிங் புனே சுப்பர் ஜெய ன்ட், குஜராத் லயன்ஸ் அணிகளுக்கு நீட்டிப்பு கிடையாது என்று ராஜீவ் சுக்லா தெரிவித் துள்ளார்.

ஐ.பி.எல். மேட்ச் பிக்சிங் விவகாரத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோய ல்ஸ் அணிகளுக்கு தலா இரண்டு ஆண்டு கள் தடை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த வருடமும் (2016), இந்த வருடமும் (2017) ஐ.பி.எல். தொடரில் இரு அணிகளும் பங் கேற்கவில்லை.

அதற்குப் பதிலாக ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட், குஜராத் லயன்ஸ் ஆகிய இரண்டு அணிகள் பங்குபற்றுகின்றன. இந்த இர ண்டு அணிகளும் இரண்டு வருடங்கள் மட்டுமே இடம்பெறும் வகையில் ஒப்பந்தம் போடப்பட்டது.

அடுத்த வருடம் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க தகுதி பெற்றுவிடும். இத னால் 10 அணிகள் பங்கேற்குமா? என்ற யூக ங்கள் நிலவி வருகின்றன.

இந்நிலையில் ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட், குஜராத் லயன்ஸ் அணிகளுக்கு இடையிலான ஒப்பந்தம் நீட்டிக்கப்படாது என்று ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து ராஜீவ் சுக்லா கூறுகையில், "அடுத்த வருடம் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இரண்டு அணிகளும் திரும்ப விளையாட தகுதி பெற்றுவிடும். அடுத்த ஐ.பி.எல். தொட ரில் 8 அணிகளா? 10 அணிகளா? என்ற கருத்து நிலவி வருகிறது. இது குறித்து வரும் ஆட்சிமன்றக் குழுவில் நாங்கள் விவாதம் நடத்துவோம். இதுவரை நாங்கள் 8 அணி களுடன்தான் சென்று கொண்டிருக்கிறோம்.

குஜராத் மற்றும் புனே அணிகளுக்கு நீட் டிப்பு கொடுக்கவில்லை. ஏனென்றால் அவர் களுடன் இரண்டு வருடங்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றார்.

## சம்பியன்ஸ் டிராபி; இந்தியா பங்கேற்பு

சம்பியன்ஸ் டிராபியில் இந்திய அணி பங் கேற்பது உறுதியாகி உள்ளது. இந்த முடிவு பி.சி.சி.ஐ., சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.,) எதிர்ப்பையும் மீறி, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) புதிய வருமான பகிர்வு திட்டத்தை கொண்டு வந்தது.

இதனால், அடுத்த எட்டு ஆண்டுகளில் சுமார் ரூ. 2000 கோடி வரை இந்தியாவுக்கு இழப்பு ஏற்படும்.

இதை எதிர்க்கும் வகையில், வரும் ஜூன் முதலாம் திகதி இங்கிலாந்தில் தொடங்கும் சம்பியன்ஸ் டிராபி தொடரை புறக்கணிக்கும் முடிவை பி.சி.சி.ஐ., எடுக்கும் என கூறப் பட்டது.

### கூட்டத்தில் முடிவு

ஆனால், சுப்ரீம் கோர்ட்டால் நியமிக்கப் பட்ட நிர்வாகக்குழு கமிட்டி, 'வீரர்களை உடனடியாக தேர்வு செய்ய வேண்டும்,' என, அறிவுறுத்தி இருந்தது.

இது குறித்து முடிவு செய்ய டில்லியில் பி.சி.சி.ஐ., சிறப்பு பொதுக் குழு நேற்று நடந் தது. இதில் சம்பியன்ஸ் டிராபியில் ப கேற்பது என முடிவு எடுக்கப்பட்டது.

### இன்று தேர்வு

பி.சி.சி.ஐ., வெளியிட்ட அறிக்கையில், 'எதிர்வரும் சம்பியன்ஸ் டிராபியில் இந்திய அணி பங்கேற்கும். இந்த முடிவை சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் எடுத்துள்ளோம்.

இத்தொடருக்கான வீரர்களை, தேர்வு செய்வதற்கான தேர்வுக்குழு கூட்டம் இன்று நடக்கவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு சம்பியனான இந்திய அணி சம்பி யன்ஸ் டிராபியில் பங்கேற்பது உறுதி செய் யப்பட்டது. இந்திய இரசிகர்களுக்கு மகிழ்ச் சியை கொடுத்துள்ளது.


முதலாம் ஆண்டு

நினைவஞ்சலி

பிறப்பு 21 - 07 - 1953

இறப்பு 21 - 03 - 2016

திருமதி

இராசலட்சுமி குருநாதபிள்ளை

எங்கள் பாசமுள்ள அம்மா!
பார்க்கும் இடமெல்லாம் உங்கள்
பாசமுகம் தெரிகிறது
கேட்கும் ஒலியெல்லாம் உங்கள்
குரலாய் ஒலிக்கிறது
நீங்கள் எமக்கு ஊட்டி வளர்த்த
நற்பண்புகள் ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
எம் வாழ்வில் வளம் சேர்த்துள்ளது.
உங்கள் பிரிவின் துயரம் தாங்காமல்
கண்ணீரில் தவிக்கின்றோம்.
எம் உயிர் உள்ளவரை உங்களின்
பசுமை நினைவுகள்
எம்மோடு வாழும்.

(8960)

பிடாரி கோவிலடி, கொக்குவில் மேற்கு. தகவல்: குடும்பத்தினர்



மரண அறிவித்தல்

செல்வநாயகம் ராஜராஜன் (ராஜன்)

(சாரதி - மாவட்ட செயலகம், முல்லைத்தீவு)

பிறப்பு:- 1976.04.05 இறப்பு:- 2017.05.05

`தம்பசிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் குடியிருப்பு முள்ளியவளையை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் ராஜராஜன் (ராஜன்) (சாரதி - மாவட்ட செயலகம், முல்லைத்தீவு) கடந்த 05.05.2017 அன்று அகால மரண மடைந்து விட்டார்.

அன்னார் செல்வநாயகம் - தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் கார்த்திகேசு - யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஜீவாஜினியின் (ஆசிரியை - மு/கலைமகள் வித்தியாலயம்) அன்புக் கணவரும் நிலவெழிலன், எழிலகன், பவிஷ்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாவதி (ஜேர்மனி), தயாளன் (அமரர்), குணவதி, சுதாகரன் (அமெரிக்கா), ரேவதி (கனடா), கலாவதி (அமரர்), புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறீரஞ்சன் (விவசாய போதனாசிரியர்), ஜீவரஞ்சன் (அவுஸ்திரேலியா), லோகரஞ்சன் (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்), ஜெயந்தினி (கனடா), யோகபாலன் (அமரர் - ஜேர்மனி), செல்வவிங்கம், பாபு (கனடா), தட்சாயினி, கணேஸ்ராஜ் (S.S.O) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவீந்திரனின் சகலனும் சர்மினி, ஷாலினி, ஷமி, சுரேகா, தக்சனா, சுஜீபன், கஜானன், ஹரிசா, ஹரன், தகீசன், விதுர்சனா, நிரூசிகா, தனாஷகி, அர்த்தனன், புவிறயன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்சரன், அதிஸ்ரன், ஆர்வலன், சீராளன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2017) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக நாவல்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ம் வட்டாரம். ஐயனார் குடியிருப்பு, முள்ளியவளை. (C-8514) - குடும்பத்தினர்

# திருமலை காட்டுப் பகுதியில் அழிவடைந்த சிவன் ஆலயத்திலிருந்து



# ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

(05.05.2017 தொடர்ச்சி)

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து கல்வெட்டுக்களில் மூன்று கல்வெட்டுக்கள் கி.பி. 10ஆம் - 11 ஆம் நூற்றாண்டையும், ஏனைய இரு கல்வெட்டுக்களும் கி.பி. 14ஆம், 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப் பிடமுடிகிறது.

இக்காலக் கணிப்பை இந் தியாவின் தலை சிறந்த கல் வெட்டு அறிஞர் பேராசிரியர் வை.சுப்பறாயலு, பேராசிரியர் இராஜவேலு மற்றும் கலாநிதி இரகுபதி ஆகியோரும் உறுதிப் படுத்தியுள்ளனர். தற்போது இக் கல்வெட்டுக்கள் மணிமாறனின் கடினஉழைப்பாலும், தொல்லி யல் மாணவர்களின் அதிதீவிர ஆர்வத்தாலும் படியெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை முழுமையாக வாசித்து முடிக்கும் கட்டத்தில் இங்குள்ள ஆலயம் முதல் மூன்று கல்வெட் டுக்களின் காலத்தில் இலங்கை யில் ஆட்சியிலிருந்த சோழ ஆட்சி யாளர்களால் கட்டப்பட்டதா அல்லது அவர்கள் ஆட்சிக்கு முன்பின்னாக அல்லது சோழர் ஆட்சியில் இங்கிருந்த தமிழர்க ளால்கட்டப்பட்டதாஎன்ற உண்மை தெரியவரும்.

இருப்பினும் இக்கல்வெட்டுக் களின் சில பாகங்கள் சிதை வடைந்து இருப்பதால் இவற்றை வாசித்து முடிக்க கால அவகாச மும், புலமையாளர்களின் ஒத்து ழைப்பும் தேவைப்படுகிறது. எதிர்வரும் 11 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதிவரை இந்து கலாசாரத் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்தி ருக்கும் கல்வெட்டுப் பயிலரங் கிற்கு தமிழகத்தின் மூத்த சாசன வியல் அறிஞர்களும் பயிற்று விக்க வருகைதர உள்ளனர். அக்காலப் பகுதியில் அவர்களின் ஒத்துழைப்போடு இக் கல்வெட்டு களை முழுமையாக வாசிக்க முடியும் என நம்புகிறோம்.

இருப்பினும் வேறுபட்ட காலங்களில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டுக்களில் இருந்து இவ்வாலயத்திற்கு நீண்ட வர லாறு இருப்பது தெரிகிறது.



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

இதற்கு திருகோணமலை யிலுள்ள வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஆலயங்கள் பற்றி கூறும் தலபுராணங்களில் ஒன் றான திருகரைசை புராணத்தி லும் இவ்வாலயம் பற்றிக் கூறி யிருப்பது இதன் பழைமைக்கு மேலும் சான்றாகும். இவ் வாலயம் அமைந்திருக்கும் திரு மங்களாய்.பிரதேசத்தில் பண்டு தொட்டு வாழ்ந்த பரம்பரையின் தற்கால வழித்தோன்றல்களான வி.முத்துலிங்கம் (தலைவர்), கே.குரேந்திரராசா (செயலாளர்), கே. மாணிக்கராசா (பொருளாளர்) ஆகியோர் இணைந்து திருமாங் களாய் திருக்கரையைப்பதி சிவன் பரிபாலனசபையை ஏற்படுத்தி அதனூடாக சமகால சமாதான சூழ்நிலையில் இவ்வாலயத்தை மீள் உருவாக்கம் செய்வதற்கு அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களின் முயற்சி வெற்றி யடைய இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், மத்திய கலா சார நிதியமும் உரிய நடவடிக் கைகளை முன்னெடுக்கும் என நம்புகிறோம். (முற்றும்)

## மீனம்

புத்திசாதுரியமாக நடந்து பாராட்டைப் பெறும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமை யும், போசன சுகமுண்டு.

## மேடம்

பிரபலமானவர்களின் சந்திப் பால் பெருமையடைவீர்கள், தொழில் விருத்திக்கு நண்பர்க ளின் ஒத்துழைப்பு கிடைக் கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## இடபம்

புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

## மிதுனம்

மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும்.

## கும்பம்

பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள் வது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம். வேலைச் சுமை கூடும் நாள்.

## மகரம்

இனிய அனுபவங்கள் ஏற் படும் நாள்,பூர்வீகச் சொத்துக் களால் ஆதாயமுண்டு, பகை யொன்று நட்பாகலாம், பய ணங்களால் பலனுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம் - பூரட்டாதி<br>இரவு 12.05 இற்கு<br>துலா- சந் | | ராகு |
| | சனி | | குரு சந் |

# இராசி பலன்

08.05.2017
(சித்திரை 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 12.20 மணிவரை
அத்தம் முற்பகல் 11.04 மணிவரை
சுபநேரம் 11.55 -1.25 மணிவரை
இராகுகாலம் 7.25 - 8.55 மணிவரை
சர்வதேச செஞ்சிலுவை தினம்
சித்தாமிர்தம் வளவன்

## கடகம்

உறவினர்கள், நண்பர்களின் வருகையால் குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவா கும், போசனசுகமுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## சிம்மம்

சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, வாக்கு மேன்மை யுண்டு, பணப்புழக்கம் அதிக ரிக்கும் நாள்.

## தனுசு

மற்றவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர்.

## விருச்சிகம்

வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும் பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

## துலாம்

வழக்கமான பணிகளில் மாற்றம் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள், உள்ளன்போடு பழகிய வர்களின் எண்ணிக்கை கூடும்.

## கன்னி

பெரிய மனிதர்களின் தொடர்பு கள் அதிகரிக்கும் நாள், வழி பாட்டில் ஆர்வம் காட்டுவீர் கள், போசனசுகமுண்டு, உறவு கள் வழியில் அன்புத் தொல்லை கள் ஏற்படலாம்.

# எமது மக்கள் சொந்த நிலத்தில் குடியேறுவதை தடுக்கும் காரணங்களை ஏற்றுக் கொள்ளமுடியாது

## டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டு

இருபத்தி ஐந்து வருடங்களாக தமது சொந்த நிலத்திலிருந்து இடம்பெயர்ந்து இன்னும்ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இரணைதீவு மக்களின் அவலத்தையும், கோரிக்கையையும் இந்த அரசாங்கம் அக்கறையோடு செவிசாய்த்துக் கேட்டு அதற்கு பரிகாரம்காண வேண்டும். அந்த மக்கள் தமது பூர்வீக நிலமான இரணைதீவில் மீளக்குடியமர்வதைத் தடுக்கும் எந்தக் காரணங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஈ.பி.டி பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை மீண்டும்தமது சொந்த நிலத்தில் வாழ அனுமதிக்க வேண்டுமெனக் கோரி நடத்திவரும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

1992ஆம் ஆண்டு நாட்டின் போர்ச் சூழல் காரணமாக பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், தேசிய பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்துடனும் இரணைதீவில் வாழ்ந்த 185 குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து பெருநிலப்பரப்பான இரணைமாதா நகரில், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும், சிலர் தமக்கு கிடைக்கப்பெற்ற வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

நிலையற்ற அந்த வாழ்க்கையில் இந்த மக்கள் அனுபவித்துவரும் அவலங்களிலிருந்து விடுபட்டு, தாம் பூர்வீகமாக வாழ்ந்த சொந்த நிலத்திற்குத் திரும்புவதற்கு பலமுயற்சிகளை அவர்கள்மேற்கொண்டிருந்தார்கள். நானும் அந்த மக்களைச் சென்று பார்வையிட்டதுடன், இரணைதீவுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் நேரடியாக ஆராய்ந்து வந்தேன்.

அந்த மக்களின் கோரிக்கைகள் தொடர்பாகவும், அவர்கள் தமது சொந்த இடம் திரும்புவதன் அவசியம் தொடர்பாகவும் ஏற்கனவே நான் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் இருக்கின்றேன்.

கடந்த 25 ஆண்டுகளில் 185 ஆக இருந்த இரணைதீவு மக்களின் குடும்ப எண்ணிக்கை தற்போது 340 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 60ஆக இருக்கின்றது. அந்தக் குடும்பங்களின் துயர் துடைக்க வேண்டுமாக இருந்தால் அவர்களை சொந்த நிலத்தில் சுய பொருளாதாரத்தில் வாழ விடுவதே ஒரே வழியாகும்.

இந்த நிலையில் இந்தக் குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினை விஷ்வரூபம் எடுத்துள்ளது. பெரும்பாலும் கடற்தொழிலையும், கால்நடை வளர்ப்பையும் நம்பியே இவர்கள் வாழ்பவர்கள் என்பதால் அவர்கள் சொந்த நிலத்தில் வாழும்போதே தமக்குரிய தொழிலைச் செய்யமுடியும்.

இடம்பெயர்ந்து வாழும் இடத்தில் அவர்கள் தமது தொழிலைச் செய்யமுடியாது. இந்த நெருக்கடி நிலையிலிருந்து அவர்கள் மீள்வதற்கும், சுய பொருளாதாரத்தில் தமது வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்கும் இரணைதீவுக்கு மீண்டும்மீள்குடியேறிச் செல்வதே ஒரேதீர்வாகும்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியே இரணைதீவு மக்கள் இப்போது அறவழிப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அவர்கள் தம்மை சொந்த மண்ணில் மீள் குடியேற்றும்வரை தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

யுத்தம் நடந்தபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்கள் இடம் பெயர்வது தவிர்க்க முடியாததாக இருந்ததை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்வோம். ஆனால் அழிவு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் இன்னமும் எமது மக்கள் தமது சொந்த நிலங்களுக்கு திரும்ப முடியாமலிருப்பதையும், மீளக் குடியேற முடியாமலிருப்பதையும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இரணைதீவு மக்களைப் பற்றிக் கூறும்போது, இது போல் கேப்பாபிலவிலும், பிலக்குடியிருப்பில் விடுவிக்கப்படாத பகுதியிலும், வலி காமம் வடக்கு, வலி காமம் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளிலும் வாழ்ந்த மக்களின் கோரிக்கைகளும், போராட்டங்களும் உணர்த்துகின்ற செய்தியும் இதுவாகத்தான் இருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே சொந்த நிலங்களில் மீள்குடியேறவும், சுய பொருளாதாரத்தில் வாழவும் ஏங்குகின்ற தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் விரைவான தீர்வை வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

## இளைஞர்களால் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி குழந்தை யேசு ஆலய குழந்தை யேசு இளைஞர்களால் இரத்ததான முகாம் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆலயத்தில் நடைபெற்றது.

இதில் 30 இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். இவ் இரத்ததான முகாமிற்கு பருத்தித்துறை இரத்த வங்கியினர் சென்று குருதிகளை சேகரித்தனர். (இ-60)

## காணாமற் போனோரின் உறவினர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்கின்றது

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் காணாமற் போனோரின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 54 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

காணாமற் போனோரின் உறவினர்களினால் வட பகுதியில் தொடர்ச்சியாகக் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருதங்கேணியில் 15.03.2017 அன்று ஆரம்பமான இக் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு பலதரப்பட்டவர்களும் தமது ஆதரவினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## அடியவர்களை ஒன்றுகூட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான்மானம்பிராய் பிள்ளையார் கோவிலில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி புதன்கிழமை சித்திரை பௌர்ணமி தினத்திலன்று வழிபாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அன்றைய தினம் சிறப்பான பூஜை வழிபாடுகளுடன் அடியவர்களுக்கு சித்திராக் கஞ்சி வழங்குவதற்குமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே அன்றையதினம் வருகை தரும்மெய்யடியார்கள் அனைவரும் காலை 9 மணியளவில் யா.வயாவிளான் மத்திய கல்லூரி முன்பாக ஒன்றுகூடுமாறு ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (இ-9)

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

சங்கானை பட்டின சபை வீதியில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொதுமக்கள் நன்மை கருதி சுகவாழ்வும் நற்பண்புகளும் எனும் கருப்பொருளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இறேனியஸால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 11.05.2017 வியாழக்கிழமை வரை 3 நாட்கள் இரவு 7 மணிவரை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. 10.05.2017 புதன்கிழமை மாலை 4 மணிக்கு விசேட தியான நிகழ்வும் 11.05.2017 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 3 தினங்களும் உடல் உளக் கண்காட்சி காலை முதல் மாலை வரை நடைபெறும். (இ)

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிக்கப் வாகனம் வல்லையில் விபத்து

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிக்கப் வாகனம் ஒன்று பாலக் கட்டுடன் மோதி விபத்துக்குள்ளான போதிலும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

நேற்றுநண்பகல் 12மணியளவில்வல்லைப்பாலத்தடியில் இவ்விபத்துஇடம்பெற்றுள்ளது.

வடமராட்சியில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வு ஒன்றிற்காக விளையாட்டுப் பொருட்களை கொண்டு வந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

மழை பெய்து கொண்டிருந்த போது அச்சுவேலி பக்கமாக இருந்து வடமராட்சி நோக்கி வந்த பிக்கப் வாகனம் வீதியை விட்டு விலகி பாலக் கட்டுடன் அடிபட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-60)

## சட்டவிரோதமாக மணல் அகழ்வு; வாகனம் பொலிஸாரால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்ரர் வாகனம் ஒன்றினைத் தாம் பறிமுதல் செய்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை துன்னாலை குடவத்தைப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட மணலினை ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தினைக் கைப்பற்றினர். இதனை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் மாங்குளம் ஒரு பகுதி, மன்னகுளம், பெரியார்குளம், கனகராயன்குளம் ஒரு பகுதி, IRCON ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அலங்கார உற்சவம் பூர்த்தி

இருபாலை கிழக்கு, அருள்மிகு ஸ்ரீவீரகத்தி பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா, கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. அதன் பூர்த்தி விழா இன்று 8 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் சங்காபிஷேகத்துடன் நடை பெற்று மதியம் அன்னதானமும் மாலை வசந்தோற்சவ நிகழ்வும் திருவூஞ்சல் நிகழ்வும் நடைபெற்று சுவாமி அழகிய முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும். (இ)

39

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

யாழ்.மாவட்டத் தேர்தல் முடிவுகள் வெளியாகியதும் மக்கள் மத்தியில் ஐயங்களும் ஊகங்களும் பரவலாகப் பற்றிக் கொண்டன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனை திட்டமிட்டு தோற்கடித்து விட்டதாக அவரின் ஆதரவாளர்கள் கூறிக் கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஆரோக்கியமாக முடிந்த காரியமாக அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் இருந்தன. வாக்குகளை மீள் எண்ணலுக்கு உட்படுத்துவதாக இருந்தால் இறுதியான அறிவிப்புக்கு முன்னதாக அதைச் செய்ய வேண்டும். அதிலும் வாக்குகளை மீள எண்ணுதல் என்ற விடயத்திற்காக ஏகப்பட்ட நிபந்தனைகளைச் செய்து முடிப்பதும் கட்டாயமானதாகும். இந்நிலையில் தேர்தல் திணைக்

இருக்கவேண்டுமானால் தேசியப் பட்டியல் மூலமாகவேனும் சுரேஷ் பிரேமச்சந்திரனை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்பது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கோரிக்கையாக இருந்தது.

இது ஒரு புறம் இருக்க, மறு புறம் கூட்டமைப்பின் வேட்பாளர் கந்தையா அருந்தவபாலனின் தோல்வியால் தென்மராட்சி மக்கள் துவண்டு போயிருந்தனர்.

எப்படியும் க.அருந்தவபாலனுக்கு வெற்றி கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் இருந்த தென்மராட்சி மக்களால் அருந்தவபாலனின் தோல்வியை ஜீரணிக்க முடியவில்லை.

தேர்தல் முடிவுகளில் ஏதோ சதி நடந்து விட்டது; தேர்தல் வெற்றிகள் மாற்றியமைக்கப்பட்டு விட்டன என்றவாறான கதைகள் காட்டுத் தீயாகப் பரவியது. உண்மை எது, ஊகம் எது, பொய் எதென்று நிறுதிட்டமாகக் கூற முடியாத அளவில் எப்பவோ

# அருந்தவபாலனுக்கு நீதி கேட்டு திருமலை சென்ற தூதுக்குழு

களத்தால் அறிவிக்கப்பட்டதே இறுதியான முடிவு என்பதை ஏற்றுக்கொள்வதுதான் முடிந்த முடிவு. இந்த முடிவுக்கு ஒத்துப் போக முடியாத மனநிலையில் வேட்பாளர் அருந்தவபாலன் இருந்தாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பகைத்து விடக் கூடாது என்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்.

எனினும் அவரின் ஆதரவாளர்கள் அருந்தவபாலனின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தென்மராட்சிக்கான ஒரு கட்டாய தேவையாக கருதியிருந்ததால், அவர்கள் அருந்தவபாலனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை எப்படியேனும் கூட்டமைப்பு கொடுத்தாக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதற்காக அவர்களில் சிலர் ஒன்றுகூடி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையலுவலகம் அமைந்துள்ள யாழ்ப்பாணம் மாட்டின் வீதிக்கு 18.08.2015 அன்று இரவு 7 மணியளவில் மூன்று வாகனங்களில் வந்து சேர்ந்தனர். பேராசிரியர் கந்தசாமி, தென்மராட்சி வர்த்தக சங்கத் தலைவர் பிரகாஷ், டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம், தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் எஸ்.வாசுதேவா, ஆசிரியர் நாகேஸ்வரன், ஆசிரியர் மார்க்கண்டு உட்பட இன்னும் பலரும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா அவர்களை இக்குழு சந்தித்தது. இச்சந்திப்புக்கு முன்னதாக தாங்கள் மாவை. சேனாதிராசாவைச் சந்திக்க வுள்ளதாக இக்குழுவினர் வலம் புரிக்குத் தகவல் கொடுத்திருந்தனர்.

மாவை. சேனாதிராசாவுடனான சந்திப்பின் போது, தங்கள் வேட்பாளர் அருந்தவபாலனுக்கு அநீதி இழைக்கப்பட்டதை தெரியப்படுத்தினர். நிலைமையை உணர்ந்து கொண்ட மாவை. சேனாதிராசா அவர்கள் வந்தகுழுவோடு சேர்ந்து கதைத்து நிலைமையைச் சமாளிப் பதே புத்திசாலித்தனம் என முடிவு செய்தார்.

அருந்தவபாலனுக்கு எம்.பி. பதவி வழங்குவது தொடர்பில் சாம் (இரா.சம்பந்தர்) உடன் கதைப்பதாகவும் கூறினார்.

தேசியப் பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கடும் போட்டி நிலவுவதாகவும் அவர் கூறி முடித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவுடனான சந்திப்பு தென்மராட்சி அணிக்குத் திருப்தியைக் கொடுக் காததால் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரைக் சந்திக்க வேண்டும். இதற்காக திருகோணமலைக்குச் செல்வது நல்லது என்ற ஆலோசனையை முத்துமாரி வர்த்தக நிலைய உரிமையாளர் சிவராசா முன்வைக்க அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

20.08.2015 அன்று அதி காலைப் பொழுது சுமார் அறுபது பேர் திருகோண மலைக்குப் புறப்பட்டனர். இதில் வர்த்தக உரிமையாளர் சிவராசா; வேட்பாளர் அருந்தவபாலன், முன்னாள் அதிபர்களான செ.சேதுராஜா, சி.சிவனேஸ்வரன், கைலை நாதன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் தயானந்தராசா, சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் பிரகாஷ், தென்மராட்சி இலக்கிய அணித்தலைவர் வாசுதேவா, சமூக சேவையாளர் சிவஞானம், ஆசிரியர்களான நாகேஸ்வரன், மார்க்கண்டு உட்பட பலரும் இதில் இடம்பெற்றிருந்தனர்.

திருகோணமலையில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் வீட்டில் சந்திப்பு இடம்பெற்றது. இரா.சம்பந்தருடன் துரைரட்ணசிங்கமும் உடனிருந்தார். பொதுவில் அடித்து அதட்டிப் பேச வேண்டிய இடத்தில் அதைச் செய்வதில் இரா. சம்பந்தர் ஒருபோதும் தவறியதில்லை. அதேவேளை நிலைமை மோசமாகிவிடும் என்றால் அதற்கேற்றாற்போல் நெகிழ்ந்து பேசி வந்தவர்களை ஆசுவாசப்படுத்தி அனுப்பிவிடுகின்ற கெட்டித்தனமும் இரா. சம்பந்தரிடம் தாராளமாக இருந்தது.

வேட்பாளர் அருந்தவபாலனுக்கு நீதி கேட்டு தென்மராட்சிப் பிரதிநிதிகள் சுமார் 60 பேர் தன்னைச் சந்திக்க வந்துள்ளனர் என்றதும் அவர்களை சமாளித்து அனுப்பிவிடுவதே உகந்த உபாயம் எனத் தீர்மானித்த இரா.சம்பந்தர்...

(வளரும்)

-புருசோத்தமன்-

# சிறி சபாரத்தினத்தின் நினைவஞ்சலி நிகழ்வும் தமிழ் தேசிய ஒற்றுமை வாரமும் அனுஷ்டிப்பு

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மறைந்த தலைவர் சிறி சபாரத்தினத்தின் 31ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் தமிழ் தேசிய ஒற்றுமை வாரமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளரும் (ரெலோ) முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்றி உறுப்பினருமான என்.சிறிகாந்தா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், இ.இந்திரராசா, குணசீலன், ம.தியாகராசா, க.சிவநேசன், புவனேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரன் (ஜெனா), வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி கிஷோர் சுகந்தி, கட்சிப் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஸ்தாபக தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ரெலோ இயக்கத்தின் தலைவராக சிறி சபாரத்தினம் செயற்பட்டு வந்த வேளையில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் போராட்ட இயக்கங்களுக்கிடையில் இடம் பெற்ற பரஸ்பர மோதல் காரணமாக பல இயக்க போராளிகள் கொல்லப்பட்டதுடன் மே மாதம் ஆறாம் திகதி ரெலோ தலைவர் சிறி சபாரத்தினம் கொல்லப்பட்டிருந்தார்.

கொலை செய்யப்பட்ட சிறி சபாரத்தினம் மற்றும் இயக்க போராளிகள் அக்காலத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவு நாளை ரெலோ அமைப்பினர் வருடந்தோறும் மே மாதம் 6ஆம் திகதி அனுஷ்டித்து வருகின்றதுடன் ஏப்ரல் 29ஆம் திகதியிலிருந்து மே மாதம் 6ஆம் திகதி வரை தமிழ் தேசிய ஒற்றுமை வாரமாகவும் பிரகடனப்படுத்தி நினைவு கூர்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

## சீரான முறையில் பாவனையாளர்களுக்கு மின்பட்டியல் வழங்கப்படாமையால்; அதிகளவு பணம் செலுத்துகின்றோம்

(குருமன்காடு)

வவுனியாவில் மின்சார சபையின் ஊழியர்கள் சீரான முறையில் மின் பட்டியல் வழங்காமையினால் மின் பாவனையாளர்கள் அதிகளவு பணத்தை மின்சார சபைக்கு செலுத்தவேண்டியுள்ளதாக மின் பாவனையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மின்சார பாவனைக்கான பட்டியலின் அளவீட்டு முறையில் பணம் அறவிடப்படுகின்றது. குறிப்பாக முதலாவது யுனிட்டில் இருந்து 156 ஆவது யுனிட் வரையான ஒவ்வொரு 39 யுனிட்டுக்கும் அறவீட்டு தொகை மாற்றம் அடைந்து செல்லும்.

இதன்போது 79 ஆவது யுனிட்டில் இருந்து 117 ஆவது யுனிட் வரையும் யுனிட் ஒன்றின் விலை 10 ரூபாவாகவும் 118 ஆவது யுனிட்டில் இருந்து 156 ஆவது யுனிட் வரை 27.75 ரூபாவாகவும் 157 ஆவது யுனிட்டில் இருந்து 179 ஆவது யுனிட் வரை 32 ரூபாவும் அறவிடப்படுகின்றது.

இந்த நிலையில் மாதாந்தம் குறித்த திகதியில் மானி வாசிப்பு அளக்கப்படும் பட்சத்தில் மின்பாவனையாளர் சீரான மின் பாவனையை பயன்படுத்தி வரும் போது அறவிடப்படும் நிதியும் குறைந்தளவில் அல்லது சீரான அளவில் காணப்படும்.

எனினும் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அளவீடுகள் மேறகொள்ளப்படும் போது மின் பாவனை அதிகரித்துள்ள நிலையில் பாவனையாளர் தங்களது பாவனைக்கான கட்டணத்தை அதிகரித்து செலுத்த வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுகின்றது.

இதன் காரணமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல குடும்பங்கள் அதிகளவான பணத்தை செலுத்தும் நிலை ஏற்படுகின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்ட பலருக்கு இதுவரை மானி வாசிப்பு அளவிடப்படாமையினால் குறித்த பயனாளிகள் மிக அதிகளவான பணத்தைச் செலுத்தும் நிலையும் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (2-250)

## உறவுகளை இழந்து பரிதவிக்கும் எமக்கு விரைந்து பதில் கூறு அரசே!

### முல்லையில் போராட்டம் தொடர்கின்றது

0

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்பில் உரிய பதிலை அரசு வழங்காதநிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம் 61ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

இறுதியுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த மற்றும் ஆயுததாரிகளால் கடத்திச்செல்லப்பட்ட தங்களுடைய உறவுகள் தொடர்பில் உரிய பதிலை கடந்த எட்டு ஆண்டுகளாக அரசு மறைத்து வழங்காத நிலையில் அவர்களது உறவினர்களால் பல்வேறு போராட்டங்கள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டன. இந்தப்போராட்டங்களைத் தொடர்ந்து தற்போது முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின், உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொடர்கவனயீர்ப்புப்போராட்டம் நேற்று 61 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (2-281)

## கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு; ஒருவர் கைது

### கல்லாறு பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரின் சுற்றிவளைப்பிற்குள்ளானது.

இதன்போது ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதானதுடன் 6 பரல்கள் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணம் என்பன கைப்பற்றப்பட்டன. இச்சம்பவம் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது, தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்படி இடம் சுற்றிவளைப்பிற்கு உள்ளானது.

இதன் போதே 06 பரல் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணம் என்பன கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஒப்படைக்கப்பட வுள்ளதாகவும் சந்தேக நபர் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

## 2 கோடியே 40 இலட்சம் ரூபா நிதியில்

# 3 கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள விவசாயக்குளங்கள் புனரமைக்கப்படும்

### முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

மத்திய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2. கோடியே 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 3 கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் நோக்கில் விவசாயக் குளங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2 கோடியே 40 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் நடப்பாண்டில் ஒட்டுசுட்டான், பாண்டியன். முள்ளியவளை ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் குளப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய, ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள நல்லிருப்புக் குளப் புனரமைப்பு வேலைகளுக்கு 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும்,

இதேபிரிவில் உள்ள, சின்னக்குளம் புனரமைப்பு வேலைகளுக்காக 27 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கல்லிருப்புக் குளம் புனரமைப்பு செய்வதற்கு 61 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள நந்திக்கடல் நீரேரியின் அணைக்கட்டு அமைப்பு வேலைகளுக்காக 89 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 2 கோடியே 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வேலைகள் யாவும் கேள்வி கோரல்கள் மூலமாக ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்கப்பட்டு வேலைகள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வேலைகள் நடைபெறும் பகுதியில் உள்ள கமக்கார அமைப்புக்கள் வேலை தொடர்பில் கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறை பாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தனக்கு அறியத்தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (2-5-15)

## சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நிரந்தர நியமனம் கோரி தொடர்கின்றது

### ஜனாதிபதிக்கு நேற்று கடிதம் அனுப்பிவைப்பு

தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வவுனியா சுகாதார தொண்டர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று 4 ஆவது நாளாகவும் தொடர்ந்ததுடன் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

போராட்டத்தை முன்னெடுத்து வரும் சுகாதார தொண்டர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் வரையில் தாம் தொடர்ந்து போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தங்களது நியாயமான போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 15 வருடத்திற்கு மேலாக தங்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை, சுகாதார தொண்டராக பணியாற்றிவரும் தங்களுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் நியமனம் வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் அதற்கு அவர் இன்று வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த வாரம் அவருடன் மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்தே தங்களது போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் கடந்த யுத்த காலத்தில் தங்களது பங்களிப்பு பெருமளவு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

மேலும், நேற்றைய போராட்டத்தில் சுமார் 30 இற்கு மேற்பட்ட சுகாதார தொண்டர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். ஜனாதிபதிக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுகாதாரத் தொண்டர்கள் ஆகிய நாம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்த காலத்தில் மற்றும் நலன்புரி நிலையங்கள் முதல்கொண்டு இன்று வரை எதுவித வேதனமுமின்றி தொண்டர் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்து செயற்பட்டு வருகின்றோம். கடந்த 2015.03.21 அன்று நிரந்தர நியமனம் வழங்கும் போது நிறுவனம் ஒன்றின் கொடுப்பனவுடன் கடமையாற்றிய தொண்டர்களுக்கு இந்த சமயம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இருந்த போதும் தகுதியிருந்தும் 2015 ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை. அடுத்த கட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது.

தற்போது க.பொ.த. சா.த. பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைய வேண்டும் என்ற காரணத்தை கூறி இம்முறையும் நிரந்தர நியமனம் வழங்கு வதிலிருந்து தட்டிக் கழிக்க முயற்சிக்கின்றனர்.

எனவே சுகாதார தொண்டர்களாக சேவையாற்றிய காலப்பகுதி அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்கவும் என்பதுடன், கடந்த கால ஆட்சேர்ப்பு முறைப்படி சுகாதாரத் தொண்டர்களை நிரந்தர நியமனத்திற்கு அரசு கவனத்தில் கொள்ள வேண்டும், சுகாதாரத் தொண்டர்களின் சுகாதார சேவைகளை அதிக கல்வித் தகுதி பாராது அனுபவரீதியான சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும், சுகாதார சேவை உதவியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய ஆண் சேவையாளர்களை உள்வாங்காது தற்போது பல வருடங்களாக சுகாதார சேவையில் தொண்டாற்றிய பெண் சுகாதார தொண்டர்களை உள்வாங்கவேண்டும்.

சுகாதார சேவைக்காக வரும் பெயர் விபரங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டாம், வயது எல்லை பாராது சேவைக்கால அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், நல்லாட்சி அரசே சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கொடுங்கள், ஜனாதிபதி அவர்களே! தங்களின் சாதகமான முடிவு வரும் வரை எமது கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு மாகாணத்தில் தொடரும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

## மாங்குளம் ம.வி. முதலாமிடம்

(துணுக்காய்)

துணுக்காய் வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப் போட்டிக்குரிய காத்தவராஜன் சிந்து நடைக் கூத்து கடந்த 5 ஆம் திகதி துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

இப் போட்டியில் மு/மாங்குளம் ம.வி.மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

14 மாணவர்களைக்கொண்ட மாணவர் அணியினர் இதில் பங்கேற்று இருந்தனர். மேற்படி பாடசாலை மாணவர்கள் கடந்த ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிக்கான சிந்து நடைக்கூத்தில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை துணுக்காய் வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான் கோட்டத்திற்கான கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளும் முடிவுற்ற நிலையில் மு/மாங்குளம் ம.வித்தியைச் சேர்ந்த மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று வலய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

இதற்கமைய,

பிரிவு 5

பாவோதல் - ஸ்ரீ ஆதவன், சிறுகதை எழுதுதல்- றூ.றொவேக்கா, பேச்சு- ப.டயந்தா. இலக்கிய விமர்சனம் - ம.அஜிந்தா.

பிரிவு - 4

பாவோதல் - அ.சானுஜா

பிரிவு - 2

பேச்சு - வி.விந்துஜா. (2)

## எங்களை சொந்த ஊருக்குச் செல்ல விடுங்கள் இரணைதீவு மக்கள் கண்ணீருடன் கோரிக்கை

பூநகரி இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த இடத்திற்குச் செல்வதற்கான கவனயீர்ப்பு போராட்டம் 7 ஆவது நாளாக தொடர்கிறது. சொர்க்கமே என்றாலும் எங்களது சொந்த ஊரை போல வராது வளமாகவும் ஆரோக்கியமாகவும், நிம்மதி யாகவும் வாழ்ந்த ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டு 24 வருடங்கள் கடந்து விட்டன. எங்களை மீண்டும் ஊருக்குச் செல்ல விடுங்கள் என கண்ணீருடன் இரணைதீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மே முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சொந்த ஊருக்குச் செல்வதற்கான கவனயீர்ப்புப் போராட்டம் 7 ஆவது நாளாக தொடர்கிறது. ஊருக்கு போகாமல் தங்களின் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மக்கள் உறுதியாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரணைதீவில் வாழ்ந்த போது வசதியான வாழ்க்கையை வாழ்ந்தோம். பல தொழில்கள் இருந்தன. நாங்கள் கஷ்டப்படவில்லை. வைத்தியசாலைக்கு சென்றது கிடையாது. ஒன்றாக, ஒற்றுமையாக கூடி வாழ்ந்த ஊர் எங்களது தென்னை மரங்கள் வளர்ந்து காய்க் கின்றன, கடற்படையினர் எங்களது தேங்காய்களை எங்களிடமே கொண்டு வந்து விற்கின்றனர். எங்களது காணிகளில் குடியிருந்து கொண்டு எங்களுக்கு அனுமதி இல்லை என்று கூறுகின்றனர். இது மிகவும் வேதனை யாக உள்ளது என கண்ணீர் மல்க தெரிவித்தனர்

போராட்டத்தில் ஈடுபட்டு வரும்மக்களை நேற்று வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் சி. தவராசா, மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு, கவனயீர்ப்பில் ஈடுபடும் மக்களுக்கு தங்களின் ஆதரவையும் தெரிவித்துள்ளனர். (2-312)

## மம்மில் பிள்ளையார் ஆலய பொங்கல் விழா

(மல்லாவி)

முல்லை மாநகரில் அமைந்துள்ள மாங்குளம் அம்பகாமம் வரலாற்றுச் சிறப்பு மிக்க மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரைப் பௌர்ணமி பொங்கல் விழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அடியார்களின் நலன் கருதி போக்குவரத்து சேவைகளும் நடைபெறும்.

நேர்த்திக் கடன் செய்ய விரும்பும் அடியார்கள் தங்கள் பதிவை மேற்கொண்டு நேர்த்திக் கடன்களையும் செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# அமைச்சரவைக் கூட்டத்தை பகிஷ்கரிக்கும் ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த பிரதமர் தொடர்ந்தும் இணங்க மறுத்தால், நாளை ஒ ஆம் திகதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் தான் பங்கேற்க போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமருக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவரிடம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள எந்த அமைச்சையும் திரும்ப பெற போவதில்லை எனவும் ஜனாதிபதி அந்த அமைச்சரிடம் கூறியுள்ளார்.

பிரதமரின் இணக்கத்துடன் போயா தினத்திற்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றங்களை செய்ய போவதாக கூறிய ஜனாதிபதி, தற்போது பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீரவின் வீட்டில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

இந்த பிரச்சினை குறித்து தனது உறவினரான அமைச்சர் மலிக் சமரவிக்ரமவிடம் நாடாளுமன்றத்தில் பேசியதாக அமைச்சர் அமரவீர இதன் போது கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் நெருக்கடி காரணமாகவே அரசியல் வட்டாரத்தில் பேசப்படும் அமைச்சரவை மாற்றம் இது வரை நடைபெறவில்லை.

இதேவேளை தான் வகிக்கும் பதவியில் இருந்து தன்னை நீக்கினால், நாடாளுமன்றத்தில் பின்வரிசையில் அமர்ந்து திறைசேரி பிணை முறி விவகாரம் சம்பந்தமான சகல தகவல்களையும் வெளியிட போவதாக முக்கிய அமைச்சர் ஒருவர் பிரதமரை அச்சுறுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# பொன்சேகா மீது சட்டநடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சால்வையினாலேயே அவரை தூக்கிலிட வேண்டும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். எனவே அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென கூட்டு எதிரணியின் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவர் உதேனி அதுகோரல தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் கோரிக்கைகளை செவி சாய்க்காமல் அதன் செயற்பாடுகளை போலியாக விமர்சிக்கின்ற அரசாங்கத்தில் வெறுமனே குருடர்களும் செவிடர்களும் மாத்திரமே நிறைந்துள்ளார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கூட்டு எதிரணியின் பத்தர முல்லை நெலும் மாவத்தை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# எதிர்காலத்தில் மின்வெட்டை அமுல்படுத்த அரசு திட்டம்

## விமல் வீரவன்ச தகவல்

(கொழும்பு)

எதிர்காலத்தில், மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

கொட்டாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சாரத்தை தொடர்ந்தும் வழங்குவதாக கூறிய அரசாங்கம், மின் வெட்டை அமுல்படுத்த முயற்சித்து பொதுமக்களை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

# உலகின் பலமான நாடுகளுக்கு புதிய ராஜதந்திரத் தூதுவர்கள்

## ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

உலகின் பலமான நாடுகளுக்கு புதிய ராஜதந்திர தூதுவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இலங்கைக்கு முக்கியமான ஐரோப்பாவின் பிரதான நாடுகளுக்கு புதிய தூதுவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜேர்மனுக்கான இலங்கை தூதுவராக பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியும், பிரான்ஸ் தூதுவராக புத்தி அதாவுத என்பவரையும் பெயரிடுமாறு ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சிற்கு உத்தரவிட்டுள்ளதாக அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பிரான்ஸின் இலங்கை தூதுவர் திலக் ரணவிராஜா மற்றும் ஜேர்மனின் இலங்கை தூதுவரான கருணாதிலக அமுனுகமவும் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கருணாசேன ஹெட்டியாராச்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாடசாலை நண்பர் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(B68)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 50 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>தொ.இ: B/6150 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 60<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA, M.COM/அரசதொழில்<br>தொ.இ: G/5843 |
| பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 65 செவ் 1 இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: BCS/அரசதொழில்<br>தொ.இ: B/6151 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA/அரசதொழில்<br>தொ.இ: G/5847 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BFA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6152 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 38 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/அரசதொழில்<br>தொ.இ: G/5850 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/6154 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5856 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# மனமார்ந்த நன்றிகள்

## சிவக்கொழுந்து அகிலதாஸ்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வட மாகாண சபை உறுப்பினரும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சிவக்கொழுந்து அகிலதாஸ் அவர்களை கட்சியின் தலைவரும் மேன்மை தங்கிய ஜனாதிபதியுமான மைத்திரிபால, சிறிசேனா யாழ்.மாவட்ட அமைப்பாளராக நியமித்துள்ளார்.

ஏழை மக்களுக்கு கரம் கொடுக்கும் ஒரு தலைமையை யாழ்.குடாநாட்டு மக்களுக்கு தந்தமைக்காக ஜனாதிபதிக்கும் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திஸாநாயக்கவுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

(C-8509) ஆ.ஜெயகுமாரன் (கப்புதூ வாழ் மக்கள் சார்பாக)

# நாட்டில் மீண்டும் ஆயுத கலாசாரம்

## மகிந்தவின் விருப்பம் அதுவே–ஹாசிம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களை கிளர்ச்சியின் பக்கம் தூண்டி விடும் செயற்பாடுகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகின்றார். மீண்டும் நாட்டில் ஆயுத கலாசாரம் ஒன்றை மகிந்த எதிர்ப்பார்க்கின்றார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

மோடியின் வருகை இலங்கைக்கு மிகப்பெரிய பலத்தை கொடுக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள் மற்றும் இந்திய பிரதமரின் இலங்கை விஜயம் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ஐந்து பாடசாலைகளுக்கு டெங்கு சிவப்பு அறிவித்தல்

கம்பஹா மாவட்ட தொம்பே சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த ஐந்து அரசாங்கப் பாடசாலைகளுக்கு, சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், இறுதி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

குமாரிமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம், மண்டாவல மகா வித்தியாலயம், தெகடன பத்மாவதி மத்திய கல்லூரி, கிரிந்திவெல மத்திய கல்லூரி, தொம்பே சியனே மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கே இவ்வாறு இறுதி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழலைத் துப்புரவு செய்யுமாறும், டெங்குக் குடம்பிகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தொழிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பாடசாலைகளுக்கு ஒரு வார காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என, பாடசாலை அதிபர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## உப்புவெளி விபத்தில் 62 வயதுப்பெண் பலி

(கொழும்பு)

திருகோணமலை - உப்புவெளி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 62 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெப் ரக வாகனம் ஒன்று டன் மோட்டார் வாகனமொன்று மோதியதாலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை பகுதியை சேர்ந்த 62, வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் கைது செய்யப்பட்ட கெப் ரக சாரதி, திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பிரதமர் நரேந்திர மோடி த.மு.கூட்டணி சந்திப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவை, பாரத பிரதமர் நரேந்திர மோடி, டிக்கோயா பொதுக்கூட்டத்துக்கு முன் தனியாக சந்தித்து உரையாட உள்ளார்.

இந்த சந்திப்பின் போது, 2015ஆம் ஆண்டில் முதன் முறையாக பிரதமர் மோடி இலங்கை வந்தபோது, எமது கூட்டணியுடன் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளின் பின் தொடர்ச்சி பற்றியும், இடைக்காலத்தில் இருமுறை இலங்கை வந்தபோது எம்மை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உடன் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் பற்றியும் கலந்து ஆராயப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணி-ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஹெரோயின்; ஒருவர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்பில் நேற்று நண்பகல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வசம் இருந்து 680 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (இ-7)

## அழிவை நோக்கிச் செல்லும் ஆரிய குளத்தைக் காப்போம்

### ஆளுநர் தலைமையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

உயிர்நீத்த இராணுவ வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு "அழிவை நோக்கிச் செல்லும் ஆரியகுளத்தைக் காப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ் ஆரியகுளத்தினை நவீன முறையில் சுத்தம் செய்யும் விசேட செயற்றிட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.நகரில் முன்னெடுக்கப்பட்டது

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்ட நிகழ்வில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

உயிர்நீத்த இராணுவ வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. அந்த வகையில் இத்தினத்தை மட்டும் நினைவுகூராமல் மக்களின் அபிவிருத்திக்கும் உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற வகையில் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது சூழலை சுத்தப்படுத்த அதிகாரிகளால் மாத்திரம் முடியாது. அதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் வேண்டும் என்ற எண்ணம் இச் செயற்றிட்டத்தின் ஊடாக அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதே எமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.அகிலதாஸ், யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன், பாதுகாப்பு படையினர், கடற்படையினர், பாடசாலை சாரணர் இயக்கத்தினர், அரச அதிகாரிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டு ஆரியகுளம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் சிரமதான பணிகளை முன்னெடுத்திருந்தனர். (இ-9)

## தவறான தகவல்களை பரப்பும் நபர்களுக்கு எதிராக விசாரணை

### சி.ஐ.டியிடம் சுகாதார அமைச்சு அறிவுறுத்து

சுகாதார சேவைகள் தொடர்பாக தவறான தகவல்களை பரப்பும் நபர்களுக்கு எதிராக, விசாரணை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு, சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவருக்கே இரவு நேரங்களில் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படும். ஆனால் ஒருசில சமூக வலைத்தளங்கள் எயிட்ஸ் நோய்க்கான இரத்தப் பரிசோதனை இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படுவதாக, செய்திகள் வெளியிட்டுள்ளன.

இவ்வாறு பொய்யான தகவல்களை வழங்கும் சமூக வலைத்தளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு முறையிட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஆலோசனையின் பேரிலே நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஜேர்மனி வாகன இறக்குமதியால் இலங்கைக்கு பல பில்லியன் நட்டம்

இலங்கைக்கு மோசடியான முறையில் கொண்டு வரப்பட்ட 1500 அதி சொகுசு வாகனங்களால் பெருந்தொகை வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தயாரிப்புகளின் பெறுமதியை குறைவாக காண்பித்து கிட்டத்தட்ட1500 அதி சொகுசு வாகனங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதன்மூலம் பல பில்லியன் ரூபா தீர்வை வரி மோசடி செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவின் உயர் அதிகாரி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூறப்படும் இந்த மோசடி, அரசாங்கத்தின் சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த மோசடிக்காக ஜேர்மனியில் குறித்த வாகனம் தயாரிக்கும் நிறுவனத்திடம் நேரடியாக இறக்குமதி செய்யாமல், பிறிதொரு நிறுவனத்தின் பெயரில் வாகனத்தின் உண்மையான பெறுமதியை விடவும் குறைவாக குறிப்பிட்டு குறித்த வாகனங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தீர்வையற்ற வாகனங்கள் கொண்டு வருவதற்காக அரசாங்க அதிகாரிகளுக்கு கிடைத்த சலுகைகளின் கீழ் இந்த வாகனம் இறக்குமதி செய்துள்ளமையினால் உரிய முறையில் சுங்க பிரிவிற்கு கிடைக்க வேண்டிய வரிப் பணம் கிடைக்காமல் போயுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அரசாங்க ஊழியர்களின் தீர்வை வரி சலுகையின் கீழ் இந்த வாகனங்கள் கொண்டு வந்துள்ள போதிலும், அரச சேவை இந்த வாகனம் கொண்டு வருவதற்கு சம்பந்தப்படவில்லை. இது தொடர்பில் சுங்க பிரிவு ரீதியில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மு.க.ஸ்டாலின் விரைவில் முதலமைச்சராவாராம்

## கூறுகிறார் துரைமுருகன்

(வேலூர்)

மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக ஆகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என வேலூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் தி.மு.க. முதன்மை செயலாளர் துரைமுருகன் தெரிவித்தார்.

தி.மு.கவுக்கு எல்லா நிலையிலும் வேலூர் தான் வழிகாட்டியாக இருந்துள்ளது. வேலூரில் தான் காந்தி சிலையை திறந்து வைத்து மாற்றான் தோட்டத்து மல்லி கைக்கும் மணம் உண்டு என்று அண்ணா பேசினார்.

அதேபோல் விலைவாசி உயர்வு தொடர்பாக வேலூரில் நடந்த போராட்டத்தில் அண்ணா கலந்து கொண்டார்.

அண்ணா சிறையில் இருந்ததும் வேலூர் சிறை தான். இதேபோல எத்தனையோ திருப்புமுனையை தி.மு.க.விற்கு தந்தது வேலூர் தான்.

இந்த கருத்தரங்கம் தமிழ் நாட்டுக்கு திருப்புமுனையாக அமையும். தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வு, விவசாயிகள் போராட்டம் என ஒங்கி குரல் கொடுக்கக் கூடிய ஒரே தலைவர் ஸ்டாலின் தான்.

அவர் அரசியல் வானில் துருவநட்சத்திரமாக பிரகாசிக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்று தான் நாடு எதிர்பார்க்கிறது. ஸ்டாலின் முதல் அமைச்சராக ஆகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

# இணைப்பு முயற்சியில் பின்வாங்கிய ஓ.பி.எஸ்

(சென்னை)

அ.தி.மு.க. அணிகளை இணைக்கும் முடிவில் இருந்து ஓ.பி.எஸ். பின்வாங்கிவிட்டார். இனி இணைப்புக்கு வேலை இல்லை என அவருக்கு மிக நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜெயலலிதா மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு பரிந்துரைக்க வேண்டும், சசிகலா குடும்பத்தினரை அ.தி.மு.கவில் இருந்து அடியோடு விலக்கி வைக்க வேண்டும் என்ற 2 நிபந்தனைகளை தான் அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்கு பிரதானமாக முன்வைத்தார் ஓ.பன்னீர் செல்வம். இதற்கு உறுதியான பதிலை எடப்பாடி பழனிச்சாமி அணி இதுவரை அளிக்கவில்லை. மாறாக, 'ஜெயலலிதா மரணம் குறித்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் இப்போதைக்கு அது தொடர்பாக எதுவும் செய்ய முடியாது' என அமைச்சர் தினகரன் சீனிவாசன் உள்ளிட்டவர்கள் பேசி வருகின்றனர்.

ஒருபக்கம் ஓ.பி.எஸ். அணியுடன் இணக்கமாக போவதாக காட்டிக் கொண்டே இன்னொரு பக்கம் நாங்களே அங்கீகரிக்கப்பட்ட அ.தி.மு.க.' என்பதை தேர்தல் ஆணையத்தில் நிலைநிறுத்தவும் சசிகலா, தினகரன் உள்ளிட்ட வர்களை கட்சிக்குள் தக்கவைப்பதற்கான வேலைகளையும் மறைமுகமாகச் செய்து வருகிறது எடப்பாடி அணி. அதனால்தான், 'இனி அணிகள் இணைப்பு சாத்தியமில்லை. தமிழக சட்டப் பேரவைக்கு விரைவில் தேர்தல் வரும்' என்று கொளுத்திப் போட்டிருக்கிறார் ஓ.பி.எஸ்.

சசிகலா தரப்புக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதால் தான் கட்சியின் அடிமட்ட தொண்டர்களிடம் ஓ.பி.எஸ்ஸுக்கு செல்வாக்கு பெருகியது. இந்நிலையில், சசிகலா தரப்பின் பினாமியாக செயற்படும் எடப்பாடி அணியோடு இணைவதற்கு ஓ.பி.எஸ். எடுத்த முடிவை தொண்டர்கள் ரசிக்கவில்லை. 'அவர்களுக்கு காரியம் ஆக வேண்டும் என்பதற்காக காலை பிடிக்கிறார்கள். இதை நம்பிப் போனால் சசிகலா தரப்பு உங்களை முகவரி இல்லாமல் செய்துவிடும்' என்று போகுமிடமெல்லாம் தொண்டர்கள் ஓ.பி.எஸ்ஸிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

இதையெல்லாம் உணர்ந்துதான் இணைப்பு முயற்சியில் இருந்து ஓ.பி.எஸ். பின்வாங்கிவிட்டார். தினகரனை கட்சியில் இருந்து ஒதுக்கி விட்டதாக சொல்கின்றனர். ஆனால், அ.தி.மு.க.எம்.எல்.ஏக்களான வெற்றிவேல், தங்கதமிழ் செல்வன் உள்ளிட்டவர்கள் திஹார் சிறைக்கே சென்று அவரை சந்திக்கிறார்கள். மதுரையில் முதல்வர் கலந்து கொண்ட் விழாவை புறக்கணித்து விட்டு டில்லிக்கு போயிருக்கிறார் தங்கதமிழ் செல்வன்.

தினகரன் கைதான்தை கண்டித்து கர்நாடக மாநிலச் செயலாளர் புகழேந்தி மதுரையில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார். தினகரனை ஒதுக்கி வைத்தது உண்மையாக இருந்தால் இவர்கள் மீதெல்லாம் கட்சி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யவில்லை.

இப்படி நாடகமாடுவர்களுடன் மீண்டும் இணைந்தால் ஓ.பி.எஸ்ஸின் செல்வாக்கு சரிந்து விடும். பேச்சு வார்த்தையை இழுத்துக் கொண்டே, எடப்பாடி அரசுடன் மத்திய அரசு இணக்கமாக இருப்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி தொண்டர்களை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். ஆனால், யதார்த்தம் அப்படி இல்லை.

நிதி ஆயோக் கூட்டத்துக்காக டில்லி சென்றிருந்த முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, பிரதமர் மோடியை சந்திக்க முயற்சித்தார். ஆனால், பா.ஜ.க. முதல்வர்களை எல்லாம் சந்தித்த மோடி, எடப்பாடியை சந்திக்காமல் தவிர்த்துவிட்டார். அதேநேரத்தில், அ.தி.மு.க. எம்.பி.ஜெயசிங் தியாகராஜ் நட்டார்ஜியின் மகன் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தூத்துக்குடி சென்றிருந்த ஓ.பி.எஸ்ஸுடன் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக தனியே ஆலோசனை நடத்தினார்.

**1989 :பார்முலா**

ஓபிஎஸ்ஸுக்கு ஆதரவாகவே பா.ஜ.க. இன்றளவும் இருக்கிறது. அந்த தைரியத்தில்தான் சட்டப் பேரவைக்கு தேர்தல் வந்தால் சந்திக்கலாம் என கருதுகிறார். 1989இல் அ.தி.மு.க. இரு அணிகளாக தேர்தலை சந்தித்தது. அந்தத் தேர்தலில் ஜெ.அணிக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாக நிரூபிக்கப்பட்டதால் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. மீண்டும் ஒன்றிணைந்தது.

அதுபோல, அடுத்துவரும் தேர்தலை அ.தி.மு.கவின் இரு அணிகளும் தனித்தனியாகவே சந்திப்போம். மக்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் சொல்லிவிடும். அப்போது, தனது தலைமையில் அ.தி.மு.கதானாகவே ஒன்றிணைந்து விடும். சசிகலா கோஷ்டியும் ஒதுங்கிவிடும். இந்தத் திட்டத்துடன்தான் ஓ.பி.எஸ். இப்போது காய் நகர்த்துகிறார்.

இவ்வாறு ஓ.பி.எஸ்ஸுக்கு நெருக்கமான வட்டாரத்தினர் தெரிவித்தனர். (இ-7)

# ஜல்லிக்கட்டுக்கு திரண்டது போன்று ஒருங்கிணைந்து போராட வேண்டும்

## மு.க.ஸ்டாலின் அழைப்பு

(சென்னை)

ஹிந்தி திணிப்பு - நீட் தேர்வை எதிர்த்து ஜல்லிக்கட்டுக்கு திரண்டது போல ஒருங்கிணைந்து போராட வேண்டும் என வேலூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

ஹிந்தி திணிப்பை எதிர்த்தும், நீட் தேர்வில் தமிழகத்திற்கு விதி விலக்கு கோரியும், மத்திய அரசை கண்டித்தும் வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கருத்தரங்கு நடந்தது.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார். அவர் பேசியதாவது,

தமிழ் மொழியை காப்பாற்ற நாம் போராடினால் ஹிந்தி மொழியை எதிர்க்கிறார்கள் என்று திசை திருப்பும் அரசியல்வாதிகளை நாம் பார்க்கிறோம்.

பா.ஜ.க. தலைமையிலான அரசு மத்தியில் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து ஹிந்தி திணிப்பு எல்லா திசையிலும் தீவிரமாகியிருக்கிறது.

ஆசிரியர் தினத்தை டாக்டர் ராதாகிருஷ்ணன் பெயரில் கொண்டாடப்படும் அந்த தினத்தை குரு உத்சவ் என்று மாற்றுகிறார்கள்.

சமஸ்கிருத மொழி வாரம் கொண்டாடுவோம் என்று அறிவிக்கிறார்கள். அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஹிந்தியை முதன்மைப் பாடமாக வைக்க வேண்டும் என்று அறிவித்தார்கள்.

வங்கிகளில் பண பரிவர்த்தனை மின்னஞ்சல்கள், செல்போன் குறுஞ்செய்திகள் ஹிந்தியில் இருக்க வேண்டும் என்றார்கள்.

பொங்கல் பண்டிகை விடுமுறையை மத்திய அரசு அலுவலகங்களில் இரத்து செய்தார்கள். ஹிந்தியை ஐ.நா மன்றத்தின் ஆட்சி மொழியாக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்தார்கள்.

ஹிந்தி பேசாத மாநிலங்களில் உள்ள சி.பி.எஸ்.இ மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை ஹிந்தி கட்டாயமாக படிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஹிந்தி பேசாத மாநிலங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் ஹிந்தியில் தேர்வு எழுதலாம். நேர்காணல் நடத்தலாம் என்று கூறி, தாய்மொழியாம் அன்னை தமிழ்மொழியை தரம் தாழ்த்துகிறார்களென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெண்ணிற ஆடை அணிந்து கைகளில் ரோஜாப்பூ ஏந்தி பெண்கள் நூதனப் போராட்டம்

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோவை நீக்கும் வகையில் உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் வெண்ணிற உடைகளுடன் கைகளில் ரோஜா பூக்களை ஏந்தி வெனிசுலா பெண்கள் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோவை ஆட்சிப் பொறுப்பில் நீக்க வேண்டும் என்ற கோரிக் கையுடன் அந்நாட்டின் எதிர்க்கட்சிகளில் ஒரு பிரிவினர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்ட ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ, சர்வாதிகாரிபோல் ஆட்சி செய்து வருவதாக குற்றம்சாட்டியுள்ள எதிர்க்கட்சியினரும் கடந்த ஆறு மாத காலமாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அரசை எதிர்த்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு, சிறைகளில் அடைத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கட்சி தலைவர்களையும், பத்திரிகையாளர்களையும் விடுதலை செய்ய வேண்டும், சீரழிந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சிறப்பாக கட்டமைக்க வெளிநாடுகளில் இருந்து நிதி உதவிகளைப் பெற வேண்டும் என்பது இந்த போராட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய இந்த போராட்டத்தில் இருதரப்பிலும் 37 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் தனது அரசைக் கவிழ்க்க சில தீவிரவாதிகள் முயற்சித்து வருவதாக ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ குற்றம் சாட்டி வருகிறார்.

இந்நிலையில், உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் வெண்ணிற உடைகளுடன் கைகளில் ரோஜா பூக்களை ஏந்தி வெனிசுலா நாட்டுப் பெண்கள் நேற்று முன்தினம் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டின் பல முக்கிய நகரங்களில் நேற்று முன்தினம் நடந்த இந்த போராட்டத்தின்போது வெனிசுலா தேசிய கீதத்தை பாடியவாறு ஊர்வலமாக சென்ற பெண்களை தடுக்க முயன்ற பாதுகாப்பு படையினருக்கு ரோஜாப் பூக்களை கொடுத்தனர். (இ-7)

# போயஸ் தோட்டத்தில் பணம், நகை திருட்டு

## பன்னீர் அணி தகவல்

(சென்னை)

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கால்களை வெட்டி எடுத்து போயஸ் தோட்டத்தின் பாதாள அறையில் இருந்த பல ஆயிரம் கோடி ரூபாய், பணம் நகைகளை சசிகலா குடும்பத்தினர் கொள்ளையடித்தனர் என்று தகவல்கள் பரவி வருவதாக ஓ.பி.எஸ். அணியின் பொன்னையன் கூறியுள்ளார்.

ஜெயலலிதா மரண மடைந்து 5 மாதங்கள் நிறைவடைந்த பின்னரும் அவரது மரணத்தில் இருக்கும் மர்மம் விலகவில்லை. நீதி கேட்டு நெடும்பயணம் கிளம்பி விட்டார் ஓ.பி.எஸ். காஞ்சிபுரத்தில் ஓ.பன்னீர் செல்வம் 5 ஆம் திகதி முதல் சுற்றுப் பயணத்தை தொடங்கினார்.

பிரம்மாண்ட பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய பொன்னையன், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றி பல்வேறு சந்தேகங்கள் கிளம் பியுள்ளன.

ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் இரகசிய பாதாள அறை ஒன்று இருப் பதாக கூறப்படுகிறது.

ஜெயலலிதா வைத்திய சாலையில் இருந்த போது போயஸ் கார்டன் இரகசிய அறையில் ரொக்கமாக 25000 கோடி ரூபாய் இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜெயலலிதா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த போது அவரது கோடிக்கணக்கான பணம் மற்றும் ஆபரண நகைகளை கைப்பற்ற அவரது தோழி சசிகலா மாஸ்டர் பிளான் ஒன்றை அரங்கேற்றி அதனை தினகரன் மூலம் கச்சிதமாக முடித்ததாக தகவல்கள் வருகின்றன எனத் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு

(பாரிஸ்)

முதல்சுற்று வாக்குப்பதிவில் போதுமான பெரும்பான்மை கிடைக்காத நிலையில் பிரான்ஸ் நாட்டின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டேவின் பதவிக்காலம் முடிவதை தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க கடந்த மாதம் 23 ஆம் திகதி தேர்தல் நடந்தது.

தற்போதைய ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டே மக்கள் செல்வாக்கை இழந்ததால் இந்த தேரதலில் போட்டியிடுவதை தவிர்த்து விட்டார். பிரான்ஸ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 47 இலட்சம் மக்கள் வாக்களிக்க தகுதி உள்ளவர்களாக அறிவிக்கப்பட்டனர்.

எனவே, இந்தத் தேர்தலில் கன்சர்வேடிங் கட்சியைச் சேர்ந்த பிரான்கோயிஸ் பில்லன், வலதுசாரி தலைவர் மரின் லீ பென், லிபரல் சென்டிரிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இமானுவல் மக்ரான், மற்றும் இடதுசாரிகள் சார்பில் ஜீன்-லக் மெலன்சான் ஆகிய 4 பேர் போட்டியிட்டனர்.

முதல்கட்ட தேர்தலில் மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளரான பிரான்கோயிஸ் பில்லான் போட்டியில் இருந்து விலகி தன்னைவிட அதிகமான வாக்குகளைப் பெற்ற எம்மானுவேல் மக்ரானுக்கு ஆதரவு அளித்துள்ளார்.

இதையடுத்து, முதற்கட்ட பதிவான வாக்குகளில் 23.7 சதவீதம் வாக்குகளைப் பெற்ற வலதுசாரி தலைவரும் பெண் வேட்பாளருமான மரின் லீ பென் மற்றும் 21.7 சதவீதம் வாக்குகளைப் பெற்ற எம்மானுவேல் மக்ரான் ஆகியோர் மோதினர்.

இதற்கிடையில், எம்மானுவேல் மக்ரானின் தேர்தல் வியூகம் மற்றும் அவரது பிரசார யுக்திகள் தொடர்பான ஈமெயில் தகவல்கள் சமீபத்தில் களவாடப்பட்டு, விக்கிலீக்ஸ் உள்ளிட்ட இணையத் தளங்கள் வாயிலாக வெளியுலகுக்கு கசிந்தன. இந்த இணையவழி தாக்குதலை ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட போர் என்று எம்மானுவேல் மக்ரான் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 6 மணிக்கு இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு தொடங்கியது. நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 66,546 வாக்குச்சாவடிகளில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர். புதுச்சேரியில் வசித்துவரும் பிரான்ஸ் நாட்டினரும் உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலையில் தொடங்கி தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

சிறிய நகரங்களில் மாலை 5 மணிவரையிலும் நாட்டின் தலைநகரான பிரான்ஸ் உள்ளிட்ட பெரு நகரங்களில் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. (இ)

# தன்சானியாவில் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்து

## 32 மாணவர்கள் உட்பட 35 பேர் பலி!

(டாடோமா)

தன்சானியாவில் பாடசாலை பேருந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து ஆற்றங் கரையோரம் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் 32 மாணவர்கள் இரண்டு ஆசிரியர்கள் உட்பட 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான தன்சானியாவில் உள்ளது அருஷா மாகாணம். இங்குள்ள ஒரு பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் தேர்வு எழுதுவதற்காக பேருந்து ஒன்றில் ஆசிரியர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். பேருந்து மியாட்டு மாவட்டத்தில் உள்ள மிலேரா ஆற்றங் கரையோரம் அருகில் உள்ள சாலையில் சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, ஆற்றங் கரையோரம் உள்ள பெரிய பள்ளத்தில் உருண்டு விழுந்தது. இதில் இரண்டு ஆசிரியர்கள், 32 மாணவர்கள் மற்றும் சாரதி என 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்த ஜனாதிபதி ஜான் மகுபுலி, இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். (இ)

# பிலிப்பைன்ஸ் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் - ஐ.நா. சபை

பிலிப்பைன்ஸ் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி அக்னஸ் கொல மார்ட் (Agnes Callamard) பிலிப்பைன்ஸிற்கு நேற்று திடீரென பயணம் செய்துள்ளார்.

இந்த பயணத்தின் போது கூட்டு கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி ரோட்றிகோ டுரேரெ (Rodrigo Duterte) பதவிஏற்றுக் கொண்டதன் பின்னர் ஆயிரக் கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக திட்டமிட்ட வகையில் பிலிப்பைன்ஸில் கொலைகள் இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் அக்னஸ் கொலமார்ட் பிலிப்பைன்ஸிற்கு பயணம் செய்யவிருந்த போதும் ஜனாதிபதி ரோட்றிகோ டுரேரே விதித்த நிபந்தனை காரணமாக தனது பயணத்தை இரத்து செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சுழலும் விளக்குகளைப் பயன்படுத்த இராணுவத்துக்கு அரசு அனுமதி

(டில்லி)

அவசரப் பணி நிமித்தமாக செல்லும் பொலிஸ், இராணுவம் மற்றும் துணை இராணுவத் துறைக்கு சொந்தமான வாகனங்களில் சுழலும் விளக்குகளை பயன்படுத்த மத்திய அரசு சிறப்பு அனுமதி அளித்துள்ளது.

மத்தியில் நடைபெறும் ஆட்சி மக்களுக்கான ஆட்சி என்பதை உணர்த்தும் வகையில் மே மாதம் முதல் திகதியில் இருந்து பிரதமர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோரின் வாகனங்களில் இருந்து சுழலும் சிவப்பு விளக்குகள் அகற்றப்படும் என மத்திய போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி அறிவித்தார்.

நாடு முழுவதும் இந்த அறிவிப்பு உடனடியாக அமுல்படுத்தப்பட்டது. பிரதமர், மத்திய அமைச்சர்கள், மாநில ஆளுநர்கள், மாநில முதலமைச்சர்கள் மற்றும் அரச உயரதிகாரிகளின் வாகனங்களில் இருந்த சுழலும் சிகப்பு விளக்குகள் படிப்படியாக அகற்றப்பட்டன.

இந்நிலையில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க விரைந்து செல்லும் பொலிஸ், இராணுவம் மற்றும் துணை இராணுவத்துறைக்கு சொந்தமான வாகனங்களில் சுழலும் விளக்குகளைப் பயன்படுத்த மத்திய அரசு சிறப்பு அனுமதி அளித்துள்ளது. எனினும், ஒரு குறிப்பிட்ட பணி நிமித்தமாக விரைந்து செல்ல வேண்டிய நிலையில் மட்டுமே சுழலும் சிவப்பு, நீலம் மற்றும் வெண்ணிற விளக்குகளை பயன்படுத்த வேண்டும் என இதுதொடர்பாக மத்திய அரசு பிறப்பித்த புதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல், நிலநடுக்கம், வெள்ளம், நிலச்சரிவு, புயல், சுனாமி உள்ளிட்ட இயற்கை சீற்றத்தின் போதும், மனிதர்களால் உண்டாக்கப்படும் பேரழிவு களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பாதுகாக்கும் பணிக்காக விரைந்து செல்லும் வாகனங்களும் சுழலும் விளக்குகளை பயன்படுத்தலாம் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 82 மாணவிகள் விடுதலை

(அபுஜா)

மேற்காபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் மூன்றாண்டுகளுக்கு முன்னர் போகோஹராம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மாணவிகளில் மேலும் 82 மாணவிகள் விடுதலை செய்யப்பட்டதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று போகோ ஹராம் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். கடந்த எட்டாண்டுகளாக இவர்களின் கொலைவெறிக்கு சுமார் 20 ஆயிரம் உயிர்கள் பலியாகியுள்ளன.

இதற்கிடையில், கடந்த 14-4-2014 அன்று நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில் பெண்கள் உயர் நிலைப் பாடசாலை விடுதியில் இருந்து 276 மாணவிகளை துப்பாக்கி முனையில் கடத்திச்சென்ற போகோ ஹராம் தீவிரவாதிகள் மறைவிடத்தில் சிறை வைத்தனர்.

அவர்களை அடிமைகளாக விற்கப் போவதாக மிரட்டல் விடுத்தனர். இது உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நைஜீரிய இராணுவத்தால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. அதை தொடர்ந்து அவர்களை மீட்க அமெரிக்கா இராணுவத்தை அனுப்பியது.

கடத்தப்பட்ட மாணவிகளில் சிலர் தப்பி ஓடி வந்து விட்ட நிலையில், போகோ ஹராம் தீவிரவாதிகளின் பிடியில் 219 மாணவிகள் உள்ளதாக கூறப்பட்டது. மாணவிகளின் இருப்பிடத்தை கண்டுபிடிக்க முடியாமல் நைஜீரிய அரசு திணறியது. அதேவேளையில், கடத்தப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகியும் மாணவிகளை மீட்க முடியாத நைஜீரிய அரசின் கையாலாகாத்தனத்துக்கு உலகெங்கிலும் உள்ள பெண்ணுரிமை இயக்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், போகோ ஹராம் தீவிரவாதிகளுடன் போர் நிறுத்தம் செய்வது தொடர்பாகவும், கடத்தப்பட்ட 219 மாணவிகளை பத்திரமாக உயிருடன் மீட்பது தொடர்பாகவும் முன்னாள் ஜனாதிபதி குட்லக் ஜொனாத்தனின் முதன்மை செயலாளர் ஹசன் டுக்கூர் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார்.

அங்கு ஆட்சி மாற்றத்துக்கு பிறகும் நீடித்துவந்த இந்த பேச்சுவார்த்தையின் பலனாக நைஜீரிய சிறைகளில் இருக்கும் போகோ ஹராம் தீவிரவாதிகளை அரசு விடுவித்தால் அதற்கு மாற்றாக சிறைபிடிக்கப்பட்டுள்ள மாணவிகளில் சிலரை விடுவிப்பதாக போகோஹராம்குழுவினர் நிபந்தனை விதித்தனர்.

அந்த நிபந்தனையின்படி, ஆறு மாதங்களுக்கு முன்னர் முதல்கட்டமாக 21 மாணவிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் போகோஹராம் தீவிரவாதிகளின் குழந்தைக்கு தாயாக மாறி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மேலும் 82 மாணவிகளை போகோ ஹராம் தீவிரவாதிகள் விடுதலை செய்துள்ளதாக நைஜீரிய அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதலைக்காக பெருமுயற்சியில் ஈடுபட்ட சுவிட்சர்லாந்து அரசு மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்கு நன்றி தெரிவித்து கொள்வதாகவும் அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம் அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் - 2017

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு 2013.01.01 இல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கு அமைவாகவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் NP/05/01/GE6/UNS/RQ இலக்க, 2013.02.08 ஆம் திகதிய மற்றும் சம இலக்க, 24.06.2013ஆம் திகதிய கடிதங்களிற்கு அமைவாகவும் கீழ்க் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | மயான காப்பாளர் தரம் III | 01 |
| 02 | வேலை/வெளிக்களத் தொழிலாளி தரம் III | 01 |

❖ மாதாந்த சம்பளஅளவுத்திட்டம்

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2016 இற்கு அமைவான, சம்பளத் தொகுதி (PL1-2016) இற்கு ஏற்ப சம்பள அளவுத்திட்டமானது (24250 – 10 x 250– 10 x 270 – 10 x 300 – 12 x 330 – 36410) ஆகும். (ரூபா 25000 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை - II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்

❖ கல்வித்தகைமை :

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் ஒரு அமர்வில் 05 பாடங்கள் சித்தியடைந்தும், ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.

❖ பொது நிபந்தனைகள்

1. இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

❖ அடிப்படைத்தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

❖ தெரிவுசெய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

❖ விண்ணப்பிக்கும் முறை

1. வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00+ (VAT 15%, NBT 2%) செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் மீள அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ, அல்லது நியமனத்தின் போதோ பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

❖ கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

1. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தினை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் அவசியமன்று.

❖ விண்ணப்ப முடிவுத் திகதி

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவுங்கள் 2017.06.07ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தி. சுதர்சன்,
செயலாளர்,
வலி. தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்

(சி-8498)

# பொன்சேகாவுக்கு புதிய பதவி குறித்து வெளிநாட்டுத் தூதரகங்கள் அவதானம்

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்கள் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

சமகால அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பணிப்பகிஷ்கரிப்புகளை முன்கூட்டியே தடுப்பதற்காக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு தூதரகங்கள் விசேட அவதானத்தை செலுத்தியுள்ள்தாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொன்சேகாவின் புதிய அதிகாரம் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை தயாரித்து, தங்களின் நாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை தூதரகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இது தொடர்பாக தூதரக உயர் அதிகாரிகள் பல்வேறு தரப்பினரிடம் தகவல்கள் பெற்றுக் கொண்டதாக தெரியவருகிறது.

பொன்சேகா தொடர்பில் ராஜித வெளியிட்ட கருத்துக்களில் வலுவான விடயங்கள் எதுவும் காணப்படவில்லை.

இந்த விடயம் அரசாங்கத்தின் உண்மையான தீர்மானமாக எதிர்வரும் காலங்களில் செயற்படுத்தப்படுமா என ஆராய்ந்து பார்ப்பதற்கு குறித்த தூதரகங்கள் அவதானத்தை செலுத்தியுள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஈழத்துக்கு மூன்று சர்வதேச விருதுகள்

ஈழத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட குமாரசுவாமி உதயரூபனின் ராஜ் மூவிஸ் தயாரிப்பில் வினோதனின் இயக்கத்திலும் ராஜ் இன் ஒளிப்பதிவிலும் சுதர்சனின் இசையிலும் ஈழத்து கலைஞர்களின் படைப்பாக உருவாக்கப்பட்ட மனசுக்குள் ஒரு மழைச்சாரல் முழு நீளத் திரைப்படத்திற்கு மூன்று சர்வதேச விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கடந்த 30.4.2017 அன்று இடம்பெற்ற நோர்வே 8 ஆவது சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழா இல் மனசுக்குள் ஒரு மழைச்சாரல் திரைப்படத்திற்கு மூன்று விருதுகள் கிடைக்கப் பெற்று ஈழத் தமிழரின் கலையின் தனித்துவத்தை நிலை நாட்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் திரையிடப்பட்டு தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இத் திரைப்படத்திற்கு சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை ஆகிய விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த திரைப்படத்திற்கான விருது தயாரிப்பாளர் உதயரூபன், சிறந்த நடிகர்களுக்கான விருது-ஜோட், சிறந்த நடிகைக்கான விருது மிதுனா ஆகியோருக்குக் கிடைத்துள்ளன.

ஈழத் தமிழர் சினிமா வளர்ந்து வரும் வேளையில் மனசுக்குள் ஒரு மழைச்சாரல் திரைப்படத்திற்கு கிடைக்கப் பெற்ற சர்வதேச விருது ஈழத் தமிழரின் சினிமாத் துறையில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சேதுகாவலர் பானுகோபன்
( Old boy- st.Johns College, Jaffna)
மாணவன் - இலங்கை விமானத்துறைக்
கல்லூரி, கட்டுநாயக்க

மலர்வு 08.06.1996
மறைவு 05.05.2016

பானு! எல்லோருக்கும் நீ தம்பி!
ஆண்டு ஒன்று ஆகியும்
உனது நினைவலைகள் ஆறவில்லை
உனது ஆத்மா
அமைதியில் இளைப்பாற
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
077 672 4375

(8937)
எஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி.

# புதிய அரசியலமைப்பு தொடர்பான கருத்துக்கள் 23ஆம் திகதிக்கு முன்னர்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அரசி யல் கட்சிகளின் பிரதிநிதி களைக்கொண்ட புதிய அர சியலமைப்பை தயாரிக்கும் நடவடிக்கை குழுவின் பேச்சு வார்த்தைகளின் படி தயாரிக் கப்பட்ட இடைக்கால அறிக்கை யின் வரைவொன்று கடந்த 4ஆம் திகதி நடவடிக்கை குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுக்கு வழங்கப்பட் டுள்ளது.

இந்த அரசியல் கட்சி களின் கருத்துகளை இம் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இக்கட்சி களின் ஆய்வுக் கருத்துக் களுடன் அரசியலமைப்புக் கான நடவடிக்கைக்குழு எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் கூடுவதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளின் ஆய்வுகளின் படி பேச்சு வார்த்தைகளின் பின்னர் தயாரிக்கப்படும் நடவடிக்கை குழுவின் இறுதி அறிக்கை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு பின்னர் பாராளு மன்றம் அரசியலமைப்பு சபையாக மாறி தயாரிக்கப் படும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் இறுதி இணக்கப் பாடு காணப்படும். (இ-7)

# ஊழல் மோசடிப் பிரிவு மூடல்?

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட் சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி குற்றச் சாட்டுகள் தொடர்பாக விசா ரணைகளை மேற்கொள்ள நல்லாட்சி அரசாங்கம் நிய மித்த ஊழலைக்கட்டுப்படுத்தும் குழுவின் அலுவலகத்தை மூடிவிட நல்லாட்சி அரசின் ஒரு தரப்பினர் நட வடிக்கை களை மேற்கொண்டு வருவ தாக சிங்களப் பத்திரி கையொ ன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஆரம்பகட்ட நட வடிக்கையாக தற்போது ஊழ லைக் கட்டுப்படுத்தும் குழு வின் செயலகத்தின் மூலம் நிதிக் குற்றச்சாட்டுப் பிரி வுக்கு முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில்ஒரு பகுதி இர கசிய பொலிஸாருக்கும் ஏனை யவை விசேட விசாரணைப் பிரிவுகளுக்கும் அனுப்பி வைக் கும் நடைமுறை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த அனைத்து முறைப் பாடுகளும் நிதிக் குற்றங்கள் தொடர்பானவை என்பதால்

அது தொடர்பாக நிபுணத்து வம் பெற்ற அதிகாரிகளைக் கொண்ட குழுவை நிதிக் குற் றப் பிரிவிலிருந்து அப்புறப் படுத்தி ஏனைய பிரிவுகளுக்கு ஒப்படைப்பது கேள்விக்குறி யாகவுள்ளதாக மேலும் தெரி விக்கப்படுகிறது. (இ-7)

# தேரவாத பௌத்த நாடுகளின் ஒன்றிணைந்த அரச மட்டத்திலான அமைப்பு அவசியம்

(கொழும்பு)

தேரவாத பௌத்த நாடு களின் ஒன்றிணைந்த அரச மட்டத்திலான அமைப் பொன்று அமைக்கப்பட வேண்டுமென்று அக்ஹ மஹா பண்டித சங்கைக் குரிய கொட்டுகொட தம்மா வாச தேரர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின வைபவத் திற்கு அமைவாக இலங்கை இதனை முன்னின்று அமைப் பதன் தேவையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான ஒரு அமைப் பின் மூலம் உலகத்திற்கு பணியாற்றக்கூடிய ஆற்றல் கிடைக்கும். அதேபோன்று அத்தியாவசிய சந்தர்ப்பங் களில் பௌத்த நாடுகளுக்கு இடையில் அந்நியோன்ய புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என்றும் தேரர் சுட் டிக்காட்டினார்.

இந்த நாடுகளுக்கு இடை யிலான மக்கள் மத்தியில் நாட்டின் வரலாறு குறித்து தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தை ஏற் படுத்த வேண்டும்.

இதன் மூலம் உறவு களை மேம்படுத்த முடியும். பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அக்ஹ மஹா பண்டித சங்கைக் குரிய கொட்டுகொட தம்மா வாச தேரர் தெரிவித்துள் ளார். (இ-7)

# முக்கிய அமைச்சர்கள் 5 பேர் கூட்டு எதிரணியில் இணைவர்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத் தின் அமைச்சர்களாக உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் ஐந்து முக்கிய அமைச் சர்கள் கூட்டு எதிரணியில் இணைந்து கொள்ள உள்ள தாக இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா தெரிவித் தார்.

ஐக்கிய தேசியக் கட்சியு டன் இணைந்து ஆட்சி செய்வ தற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு ஆண்டுகளுக்கே ஒப்பந்தம் செய்து கொண் டது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்து டன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதன் பின்னரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற் படவிரும்பாத அமைச்சர் களே எம்மோடு இணைந்து கொள்ளவுள்ளனர்.

கூட்டு எதிரணியில் இணைந்து கொள்வது தொடர் பாக கூட்டு எதிரணியின் தலைவர்களுடன் மேற்படி அமைச்சர்கள் பேச்சுவார்த் தைகளை நடத்தியிருப்பதாக வும் உரிய சந்தர்ப்பத்தில் அவர் களின் பெயர்களை வெளியிடு வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மழையால் டெங்கு வேகமாகப் பரவும் அபாயம்

(கொழும்பு)

பருவப் பெயர்ச்சி மழை யால் டெங்கு காய்ச்சல் வேக மாகப் பரவக்கூடும் என சுகா தார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் தெரிவித்துள் ளார்.

இதுவரை சுமார் 40 ஆயி ரத்திற்கும் அதிகமான நோயா ளர்கள் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாய கம் ஜயசுந்தர பண்டார தெரி வித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத் துறை, யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, திருகோணமலை, குருநாகல், புத்தளம், காலி, மாத்தறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள னர்.

தேசிய வைத்தியசாலை, களுபோவிலை போதனா வைத்தியசாலை, நீர்கொழும்பு பொது வைத்தியசாலை உள் ளிட்ட பிரதான வைத்திய சாலைகள் பலவற்றிலும் டெங்கு நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந் துள்ளது.

இதேவளை, நாட்டின் சில பகுதிகளில் டெங்கு காய்ச்சலானது, தொற்று நோய் போன்று பரவுவதாக இலங்கை பொது சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித் துள்ளது.

இடைக்கிடையே மழை பெய்வதாலும் உரிய நடை முறையின்றி குப்பைகளைக் கொட்டுவதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சங் கத்தின் தலைவர் உப்புல் ரோஹன தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மனதைப் பலப்படுத்துவது எப்படி?

அணுசக்தியை ஆக்க சக்தியாகவும் பயன்படுத்த முடியும். அழிவுச் சக்தியாகவும் அதனை மாற்ற முடியும் என்பது உங்களுக் கெல்லாம் தெரியும்.

இந்த அணுசக்தியைப் போன்றதுதான் மனமும், இந்த மனம் நமக்கு துணையாக இருக்க முடியும். நமக்குப் பகையாக ஆவ தும் சாத்தியம். ஆனால் இது நம் கையில் தான் இருக்கிறது.

நீங்கள் வீழ்த்தப்பட்டீர்கள் என நினைத் தால், ஆம்! நீங்கள் வீழ்த்தப்பட்டீர்கள். என்னை வீழ்த்த ,முடியாது என்று நீங்கள் எண்ணினால், ஆம்! அதுதான் உண்மை.

என்னால் வெற்றி பெற முடியாது என நீங்கள் நினைத்தால் ஆம், அது நடக்கத் தான் போகிறது. என்னை யாரும் வெற்றி கொள்ள முடியாது நீங்கள் நினைத்தால், ஆம், அதுதான் உண்மை!

வெற்றி என்பது ஒரு மனிதனின் விருப்பம் அல்லதுமனநிலையிலிருந்து தான் ஆரம் பிக்கிறது.

நான் தூக்கியெறியப்பட்டேன் என நீங்கள் நம்பினால், ஆம்! அது நடக்கத்தான் போகி றது. என்னை யாரும் அசைக்க முடியாது என நீங்கள் நம்பினால் ஆம், அதுதான் உண்மை.

மனிதனுடைய வாழ்க்கைப் போராட் டங்கள் எப்போதுமே தீருவதில்லை. அவை மனித சக்தியைவிட வலிமையானவை அல்லது வேகமானவை. ஆனால் எந்த மனிதன் அவற்றை எதிர்த்துப் போராடும் மனவலிமையைப் பெற்றிருக்கின்றானோ அவன்தான் வாழ்க்கையில் வெற்றி பெறு கிறான். எவனுக்கு அந்த மனவலிமை இல் லையோ அவன் வாழ்க்கைச் சாலையில் தினமும் விபத்துக்கு உள்ளாகிறான்.

சரி, மனத்தைப் பலப்படுத்துவது எப்படி?

இப்போது உலகம் முழுவதும் மனத்தைப் பலப்படுத்த ஒரு வழி பின்பற்றப்படுகின் றது. அது ஆட்டோசஜசன் எனப்படும் தற் கருத்தேற்றம்.

இது எப்படி என்று விளக்குகின்றேன். மிக அமைதியான நேரம் ஒன்றைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டும்.

கண்களை மூடிக் கொண்டு, என்மனம் நன்கு பலப்பட்டு வருகின்றது; எந்தத் துன் பத்தையும் சந்திக்கத் தயாராகிவிட்டேன்; என்னிடம் எந்தவிதமான தாழ்வு மனப்பான் மையும் கிடையாது; இருளைக் கண்டு நான் பயப்படமாட்டேன்; நான் கோழையில்லை; என் உடற் குறையை நான் பெரிதாக நினைக்க வில்லை; கோபத்தை நான் வெற்றி கொண்டு விட்டேன்; எந்தத் துன்பத்தையும் என்னைப் பாதிக்க விடமாட்டேன்; எந்தச் சோகமும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்பது போல் நம் பலவீனங்கள் என்னென்னவோ அவற்றையெல்லாம் நம் பலம் போல் சொல் லிக் கொள்ள வேண்டும். தினமும் இப்படி ஐந்து முறை செய்து வந்தால் போதும். இது நமக்கு நாமே ஏற்றிக் கொள்ளும் குளுக் கோஸ்.

முயற்சி செய்துதான் பாருங்களேன். பலனிருக்கிறதா இல்லையா என்று!

**லேனா தமிழ்வாணன்**

# சசிகலா குடும்பத்தினர் இப்போது என்ன செய்கிறார்கள்

எம்.ஜி.ஆருக்குப் பிறகான அ.தி.மு.க வரலாற்றை, சசிகலா குடும்பத்தை ஒதுக்கி வைத்து விட்டு எழுத முடியாது. தமிழகத்தின் தலைமைச் செயலாளர் முதல் கட்சியின் ஒன்றியச் செயலாளர் வரை முடிவு செய்யும் அதிகார மையமாக அந்தக் குடும்பம் இருந்தது. அவர்களின் அதிகார ஆக்டோபஸ் கரங்கள், சகல திசைகளிலும் பரவி வேரூன்றின. ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பிறகு 'சின்னம்மா' என சசிகலாவை அழைத்தவர்களே இப்போது, 'சசிகலாவின் குடும்பத்தை ஒதுக்கி வைப்பதாக' அறிவித்துள்ளனர். இந்தக் களேபரங்களுக்கு மத்தியில், இப்போது சசிகலாவின் உறவுகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

சசிகலா

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற சசிகலா, பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்குள் இருக்கிறார். உறவினர்கள், கட்சிக்காரர்கள் என்று பலரும் அவரைச் சந்திக்க, சிறைக்குப் படை எடுக்கின்றனர். ஆனால், இப்போது அவர்களில் யாரையும் சசிகலா சந்திக்க விரும்புவதில்லை. குடும்பத்துக்குள் நடக்கும் பிரச்சினைகள், கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பங்கள் மற்றும் எதிர்ப்புகளால், சசிகலா மனம் உடைந்து போயிருக்கிறார். குறிப்பாக மகாதேவன் மரணம் அவர் மனதை வருத்தியிருக்கிறது. "கடைசிக் காலத்துல அவனுக்கு எதுவும் செய்ய முடியலையே" என்று புலம்புகிறாராம். பல ஆண்டுகளாக, தினமும்காலையில் தவறாமல் கடைப்பிடித்துவந்த நடைப் பயிற்சியையும், சமீப நாட்களில் அவர் முறையாகச் செய்வதில்லை.

நடராசன்

தமிழகத்தில், நிழல் அதிகாரத்தை முதலில் உருவாக்கியவர் நடராசன். பல ஆண்டுகளுக்கு முன்பே நடராசனை ஜெயலலிதா ஒதுக்கிவைத்தார். அதன்பின் போயஸ் கார்டன் பக்கமே போகாமல் இருந்த நடராசன், ஜெயலலிதா இறந்த அன்றைக்குத்தான் அங்கு போனார். ஜெயலலிதாவின் உடல்வைக்கப்பட்டு இருந்த ராஜாஜி ஹோலில் நின்று கொண்டிருந்தார். அதன்பிறகு சசிகலாவைப் பொதுச் செயலாளர் ஆக்கியது, அவரை முதல்வர் பதவிக்குக் கொண்டுவர முயன்றது ஆகியவற்றில் நடராசனுக்குப் பெரிதாக விருப்பம் இல்லை என்றாலும், அந்த நடவடிக்கைகளை அவர் ஆதரித்தார். சசிகலா சிறைக்குச் சென்ற பிறகு, தினகரன் கட்டுப்பாட்டுக்குள் கட்சி போனதும், முற்றிலும் ஒதுங்கி இருந்தார் நடராசன். இடையில் அவருக்கு உடல் நலக்குறைவும் ஏற்பட்டது. தற்போது அவருடைய பெசன்ட் நகர் வீட்டில் ஓய்வில் இருக்கிறார். "சசிகலாவின் விடுதலைதான் இப்போதைக்கு எனக்கு முக்கியம். அது கிடைக்கும்வரை நான் எதற்கும் ரியாக்ட் செய்யப்போவதில்லை" என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

திவாகரன்

இவர், சசிகலாவின் தம்பி. 'இவர் சொன்னால் சசிகலா தட்டமாட்டார்' என்று குடும்ப உறவுகளால் அடையாளம் காட்டப்படும் நபர். அப்பலோவில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட பிறகு ஆட்சியிலும், கட்சியிலும் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற முடிவுகள், திவாகரனின் எண்ணப்படிதான் எடுக்கப்பட்டன. இவருடைய ஒப்புதலுக்குப் பிறகுதான், சசிகலாவின் அரசியல் நகர்வுகளுமே இருந்தன. 'பாஸ்' என்று அ.தி.மு.கவினரால் பவ்யமாக அழைக்கப்பட்ட இவரே இப்போது பவ்யமாகத்தான் இருக்கிறார். உளவுத்துறையில் தனக்கு வேண்டிய நபர்களை உள்ளே நுழைத்த இவரால், ஆட்சியில் வேறு எதையும் பெரிதாக சாதிக்க முடியவில்லை. மணல் குவாரிகளைத் தனக்கு வேண்டிய வருக்குப் பெற்றுத் தர கடுமையாக முயன்றும், கடைசி வரை பலனில்லை. இப்போது அமைதியாக தனது செங்கமலத்தாயார் கல்லூரி நிர்வாகத்தைப் பார்த்து வருகிறார். பகல் பொழுதைக் கல்லூரியில் தான் கழித்து வருகிறார்.

இளவரசி

சசிகலாவின் அண்ணன்

ஜெயராமனின் மனைவிதான் இளவரசி. ஜெயராமன், ஜெயலலிதாவின் ஜதராபாத் திராட்சைத் தோட்டத்தில் மின்சாரம் பாய்ந்து இறந்துவிட்டார். அதன்பிறகு, இளவரசியின் குடும்பமும் போயஸ் கார்டனில்தான் இருந்தது. சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலாவோடு தண்டனை பெற்றதால், தற்போது இளவரசியும் பரப்பன அக்ரஹாரா சிறைக்குள்தான் இருக்கிறார். அங்கு, அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுதாகரன்

சசிகலா, இளவரசி ஆகியோரோடு சிறையில் இருக்கும் மற்றொருவர், சுதாகரன். சசிகலாவின் அக்கா வனிதாமணியின் மகன். ஜெயலலிதா இவரைத்தான் தன் வளர்ப்பு மகனாகத் தத்தெடுத்து, தமிழகமே அசந்துபோகும் அளவுக்கு ஆடம்பரமாகத் திருமணம்செய்துவைத்தார். ஆனால், அதன்பிறகு ஜெயலலிதாவின் கோபப்பார்வையில் சிக்கி, ஹெராயின்வழக்கில்கைதாகி, பல ஆண்டுகளாக அந்த வழக்கைச் சந்தித்து வந்தவர். சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று தற்போது சிறையில் இருக்கிறார். சுதாகரனை சசிகலா குடும்ப உறவுகளும் ஒதுக்கிவிட்டதால், அவர்களில்யாரும்அவரைப்போய்ப் பார்ப்பதில்லை. சோகத்திலும் ஆன்மீகத்திலும் அவரின் நாட்கள் நகர்கின்றன.

தினகரன்

அ.தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளர் தினகரன், தற்போது திஹார் சிறையில் இருக்கிறார். சசிகலா சிறைக்குச் சென்றதும், தினகரனின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஆச்சரியப்படத்தக்க வகையில் இருந்தன. விறுவிறுவென கட்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த தினகரன், ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் வேட்பாளராகவும் துணிந்து களம் இறங்கினார். தேர்தல்ஆணையம்இரட்டை இலைச் சின்னத்தை முடக்கி வைத்த

போதும், கவலைப்படாமல் தொப்பிச் சின்னத்தில் போட்டியிட்டார். ஆரம்பத்தில், கடுமையான எதிர்ப்பு இருந்த ஆர்.கே. நகர் தொகுதியை இறுதிக்கட்டத்தில் தனக்குச் சாதகமாக மாற்றினார். ஆனால், ஃபெரா வழக்கு, வருமான வரித்துறை -ரெய்டு எல்லாம் தினகரனைச் சுற்றிக் கொண்டே இருந்தன. கடைசியில் ஆர்.கே. நகர் தேர்தல் இரத்து செய்யப்பட்டது. கட்சியில் இருந்தும் ஆட்சியில் இருந்தும் தினகரனை அ.தி.மு.க. அமைச்சர்கள் ஒதுக்கினார்கள். இரட்டை இலைச் சின்னத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டில்லி போலீஸ் ஒரு பக்கம் துரத்தியது. தினகரனின் மனைவி அனுராதா, சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனனின் மகள், தினகரன் கைதுக்குப் பிறகு, மிகவும் மனமுடைந்து இருக்கும் அனுராதா, வீட்டை விட்டு வெளியே வருவதில்லையாம்.

பாஸ்கரன்

சசிகலா குடும்பத்திலே

விநோதமான நபர் இவர்தான். அரசியலைவிட சினிமா மீதான ஆர்வம்தான் அதிகம். ஹீரோவாக வேண்டும் என்பதற்காகவே உடல் எடை குறைத்து எல்லோரிடமும் சுற்றித் திரிந்தார். சசிகலாவின் அக்கா வனிதாமணியின் மகன்களில் இவரும் ஒருவர். ஜெ.ஜெ டி.வி-யின் நிர்வாக இயக்குநராக இருந்தவர். அந்தக்கால வழக்குகளுக்காக இப்போதும் நீதிமன்ற படியேறிக் கொண்டிருக்கிறார். சினிமா ஆசையில் குடும்ப உறவுகளிலிருந்து கொஞ்சம் ஒதுங்கி இருந்தவரை, ஜெயலலிதா மரணத்தின்போதுதான் கட்சியினர் மீண்டும் பார்த்தார்கள்.

டாக்டர் சிவகுமார்

சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனனின் மகள் பிரபா. இந்த பிரபாவின் கணவர்தான் டாக்டர் சிவகுமார். 2011-க்குப் பிறகு சசிகலா குடும்பத்தினரை ஜெயலலிதா ஒதுக்கி வைத்தார். அதன் பிறகு சசிகலாவைத் தவிர யாரும் போயஸ் கார்டன் பக்கமே வரவில்லை. ஆனால், டாக்டர் சிவகுமாரும் அவரின் குடும்பத்தினரும் எப்போதும் போயஸ் கார்டனுக்குப் போய் வரும் உரிமையைப் பெற்றிருந்தனர். ஜெயலலிதாவின் உடல்நலத்தை டாக்டர் சிவகுமார் கண்காணித்து வந்தார். ஜெயலலிதா அப்பலோ வைத்தியசாலையில் இருந்தபோது, அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் குழுவை சிவகுமார்தான்ஒருங்கிணைத்தார். ஆனால், ஜெயலலிதா இறுதி அஞ்சலி முடிந்ததும் சிவகுமார் அமைதியாகி விட்டார்.

டாக்டர் வெங்கடேஷ்

சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனனின் மகன் தான் டாக்டர் வெங்கடேஷ். இவருடைய சகோதரிகளான அனுராதாவை தினகரனும், பிரபாவை டாக்டர் சிவகுமாரும் திருமணம் முடித்துள்ளனர். ஓ.பன்னீர் செல்வத்தை ராஜினாமா செய்ய வைத்ததில் இவர் 'கை' இருந்தது, கட்சி வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது. சசிகலா சிறைக்குப் போகும் முன், கட்சியில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்ட குடும்ப உறுப்பினர்கள் இரண்டு பேரில் இவரும் ஒருவர்.

விவேக்

சசிகலா குடும்ப உறவுகளிலே இப்போது அனைவராலும் உற்று நோக்கப்படும் நபர் இவர்தான். சசிகலாவின் அக்கா வனிதாமணியின் மகன்களில் இவரும் ஒருவர். ஜெ.ஜெ டி.வி-யின் நிர்வாக இயக்குநராக இருந்தவர். சினிமா ஆசையில் குடும்ப உறவுகளிலிருந்து கொஞ்சம் ஒதுங்கி இருந்தவரை, ஜெயலலிதா மரணத்தின்போதுதான் கட்சியினர் மீண்டும் பார்த்தார்கள்.

ராக விவேக் உள்ளார். இளவரசி-ஜெயராமன் தம்பதியின் கடைக்குட்டிதான் விவேக். போயஸ்கார்டனில் ஜெயலலிதாவின் கண்காணிப்பிலும் அவருடைய அரவணைப்பிலும் சிறுவயது முதல் வளர்ந்தவர். ஜெயலலிதா, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில், இவர் சுவிட்சர்லாந்தில் தேனிலவு கொண்டாட்டத்தில் இருந்தார். தேனிலவை உடனே முடித்துக் கொண்டு சென்னை வந்தவர், ஜெயலலிதா மரணம் வரை அப்பலோவில் சசிகலாவுக்குத் துணையாக இருந்தார்.

சசிகலாவும் இளவரசியும் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்ட பின், சிறையில் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் பெங்களூரில் இருந்து செய்து கொண்டிருக்கிறார். தற்போது ஜெயா டி.வி நிர்வாகத்தையும், 'நமது எம்.ஜி.ஆர்' பத்திரிகையும் பார்த்து வருகிறார்.

ஜெயானந்த்

தினகரனை ஒதுக்கி வைக்கும் அறிவிப்பை அமைச்சர் ஜெயக்குமார் வெளியிட்டபோது, அதை வரவேற்று டுவிட்டரில் பதிவிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியவர்தான் ஜெயானந்த். சசிகலா குடும்பத்தில் வெளிப்படையாகப் பேசும் வித்தியாச மனிதரான ஜெயானந்த், திவாகரனின் ஒரே மகன்.

மகாதேவன்

சசிகலாவின் அண்ணன் விநோதகனின் மகன் தான் மகாதேவன். மன்னார்குடி குடும்ப உறவுகளிலேலே அதிரடியாக எதையும் செய்யக்கூடிய மகாதேவனின் மரணம், அவர்களின் குடும்பத்தினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஜூனியர் விகடன்

# மனிதாபிமான தொண்டர் நிறுவனம் சர்வதேச செஞ்சிலுவை தினம் இன்று

ஹென்றிடுனாண்ட் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான தொண்டர் நிறுவனம் செஞ்சிலுவைச் சங்கமாகும். ஹென்றிடுனாண்ட் அவர்களின் பிறந்த தினமான மே 8ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவைத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

மனிதாபிமானம், பாரபட்சமின்மை, சுயாதீனம், ஒருமைப்பாடு, நடுநிலைமை, தொண்டர்சேவை, சர்வதேச மயம் என செஞ்சிலுவைச் சங்கத்தின் 7 கொள்கைகள் போற்றப்படுகின்றன.

ஜெனீவாவில் தலைமையகமாகச் செயற்படும் இவ் அமைப்பு 194 நாடுகளில் மனிதநேயத்தையும் சுயகௌரவத்தையும் பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாக இன்று செயற்பட்டுவருகின்றது. சொல்பரினா என்ற இடத்தில் ஏற்பட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை கண்ணுற்ற ஹென்றிடுனாண்ட் அவர்களுக்கான மருத்துவ சேவைகளையும், உயிர் பாதுகாப்பு சேவைகளையும் வழங்கியதுடன் 40, 000ற்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப்பாதுகாத்து உடல்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார். இந்நினைவில் இருந்து மீளாத ஹென்றி டுனாண்ட் 1862 இல் சொல்பரினா நினைவுகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு சர்வதேச ரீதியாக இவ் அமைப்பின் அவசியத்தை உலகிற்கு உணர்த்தினார். 1863 இல் வேறு நால்வரை இணைத்து உலகளாவிய சர்வதேச சங்கத்தை ஆரம்பித்தார்.

இவர்முக்கியமாக தொண்டர்கள் சர்வதேச சங்கத்திற்கு இணைக்கப்பட வேண்டும்என்ற காரணத்துக்காக 1864 இல் பல்வேறு சங்கங்களையும், இராஜதந்திரிகளையும் இணைத்து முதலாவது ஜெனீவா சாசனத்தை உருவாக்கினார். இதுதான் இன்று சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஓர் தொண்டர் அமைப்பாக உருவாகுவதற்கு காரணமாகியது.

செஞ்சிலுவைச் சங்கம் வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஹென்றி டுனாண்ட் பிறந்த சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளைச் சிலுவையுடன் சிவப்புப்பின்னணியை மாற்றி அமைத்ததாகும். இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கமானது உலகளாவிய ரீதியில் செயற்படும் ஓர் அமைப்பாகும். இது செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கம் என்ற தேசிய அடிப்படையில் செயற்படுவதுடன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (IFRC) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு(ICRC) என உலகில் பெரும்பாலான பகுதிகளில் செயற்பட்டு வருகின்றது.

உலகில் ஏற்படக்கூடிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மனித சமுதாயத்திற்கு துன்பங்களை துடைத்து நலிவற்றிருக்கும்மக்களுக்குஉடன் நிவாரணங்களும் மாற்றுவழி முறைகளை கொண்ட உதவிகளையும் வழங்கி வருகின்றது. இயற்கை அனர்த்தத்தினால்மட்டு மின்றி ஆயுதப் போராட்டம் நடைபெறும் காலங்களிலும் அனர்த்த வேளைகளிலும் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாட்டினை செய்துவரு கின்ற ஓர் அமைப்பாகும். தேசிய சங்கங்கள் அந்நாட்டு நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து அப் பிரதேசத்தினருக்குமனிதாபிமானசெயற்பாட்டை நல்கி வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கக் குழுவும் மற்றும் செஞ்சிலுவைச் செம்பிறைச் சம்மேளனமும் உலகளாவிய ரீதியில் தனது மனிதாபிமான சேவைகளை நேரடியாகவும் தேசிய சங்கம் ஊடாகவும் செய்துவருகின்றன. இவ் அமைப்பானது தனது சேவையை நல்குவதால் மக்கள் மத்தியில் புது வாழ்வினை ஏற்படுத்துவதுடன் மனிதாபிமான செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. செஞ்சிலுவைச் சங்கயாப்பானது உன்னதமான குறிக்கோளையும்,கோட்பாட்டினையும் கொண்டதாகும். இதனால் தான் சர்வதேச மட்டத்தில் நிலைத்து நிற்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. சர்வதேச சங்கங்களும்தேசிய சங்கங்களும், இக் கோட்பாட்டினை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் செயற்படுத்தி வருகின்றன.

உலகளாவியரீதியில்செஞ்சிலுவைச் சங்கங்கள் 3 அங்கங்களாக செயற்பட்டு வருகின்றன.

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்க குழு (ICRC)

## சர்வதேச செஞ்சிலுவைச்சங்க சம்மேளனம் (IFRC)

## தேசிய சங்கங்கள்

1958ஆம் ஆண்டு இளைஞர் மத்தியிலும், பாடசாலை மத்தியிலும் உருவாக்கப்பட்ட இச் செஞ்சிலுவைச் சங்கம், 1980ஆம் ஆண்டுக்குப் பின் சிறந்த நிர்வாக அமைப்புடன் உருவாக்கப்பட்டது.

கடந்த 3 சகாப்தங்களாக ஏற்பட்ட யுத்த காலத்தின் போது பல்வேறு சேவையை விரிவுபடுத்தி மருத்துவ சேவை, நடமாடும் மருத்துவ சேவை, அம்புலன்ஸ் சேவை, இரத்ததானம், செஞ்சிலுவைச் சங்க பரப்புரைகள், முதலுதவிச் சேவை, முதலுதவிப் பயிற்சிகள், நிவாரணப்பணிகள் என்பனவழங்கியதுடன் யுத்தம் முடிவுற்ற பின் மீள் குடியேறிய மக்களுக்கு சுகாதார சேவை, மருத்துவ சேவை, என்பன வழங்கியதுடன் இடம்பெயர்ந்த மக்களுக்காக வீடுகளையும் அமைத்துக் கொடுத்தது. இன்றும் சிரமதானம், நடமாடும் மருத்துவ சேவை, சுகாதார சேவை, அனர்த்தத்திற்குமுகம் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளையும் செய்து வருகின்றது. மேலும், பெங்குசிக்குன்குனியா என்பன ஏற்படாமல் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி ஒட்டு மொத்தமாக மக்கள் சுகாதாரத்துடன்வாழ்வதற்கு, ஆரம்ப சுகாதார அறிவினை மக்களுக்கு ஏற்படுத்தி சுகமான வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றது.

எனவே செஞ்சிலுவைச் சங்கமானதுசர்வதேசரீதியிலும், தேசிய அடிப்படையிலும்இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தம் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் துடைத்து அவர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கை உருவாக்கும்ஓர்சர்வதேச அமைப்பாகும்.

கு. பாலகிருஷ்ணன்
தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1066

Search for people, places and things — Nagendram Home

### பூபதி

### தேவகி

### வினோத்

### கபில்

### சந்துதன்

### மயூரி

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ராஜித அமைச்சரவை இணைப்பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

டாக்டர் ராஜித சேனாரட்ன அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தினை வலுவாக முன்னெடுப்பதற்கு ராஜித சேனாரட்ன அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோர உள்ளனர்.

அமைச்சர் ராஜித தொடர்பில் இவர்கள் முறைப்பாடு செய்ய உள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கொழும்பு சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரி வித்துள்ளார்.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள் ளும் பேச்சுவார்த்தைகள் தற் போது நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அமைச்சர் ஜோன் செனவிரட்னவை, அமைச் சர் ராஜித பகிரங்கமாக திட்டி யிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அமைச்சர் ராஜித சேனா ரட்னவின் கருத்துக்கள் அர சாங்கத்தை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் அமைந் துள்ளதாக ஆளும் கட்சி அமைச் சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து ஜூனில் விவாதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 35 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை தொடர்பான விவாதம் ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான ஐக் கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ இலங்கை குறித்து சமர்ப்பித்துள்ள பரிந்து ரைகள் தொடர்பாகவே .12 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

இதன்போது ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ இலங்கை தொடர்பான அறிக் கையை வெளியிட்டு உரையாற் றவுள்ளார். அதன் பின்னர் இலங்கை பதிலளித்து உரையாற்றும். தொடர் ந்தும் மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகள் இலங்கை தொடர் பான தமது நிலைப்பாட்டை அறிவி க்கவுள்ளன. இம்முறை இலங் கையின் சார்பில் ஜெனிவா மனித உரிமை பேரவைக்கான வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

இலங்கை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ சாட்சி பாதுகாப்பு மற்றும் பாதிக்கப் பட்டோர் தொடர்பான பொறிமுறை உடனடியாக மீளாய்வு செய்யப் படவேண்டும் என்று வலியுறுத் தியுள்ளார். அத்துடன் அர்த்தமுள்ள பாதுகாப்பு இதில் இடம்பெற வேண் டியது அவசியம்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படா மல் இருக்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பரந்துபட்ட நடவடிக்கைகள் அவசியமாகும் என்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

இதேவேளை 2015 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நிறைவேற்று வதற்கு அரசாங்கம் மிகவும் வலு வான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிலைமாறுகால நீதிப் பொறிமுறை சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் நம்பகரமான தாகவும் அமைய வேண்டும் என் றும் மொனிகா பின்டொ கூறியுள் ளார்.

இவரது அறிக்கை தொடர் பான விவாதமே எதிர்வரும் 12 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேர வையில் நடைபெறவுள்ளது. (இ-7)

# புதிய நியமனங்களுக்கு நிதியை விடுவியுங்கள்

## கிழக்கு முதல்வர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் தற்போது தேசிய முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதிக் கப்பட்டுள்ள புதிய ஆசிரியர் நிய மனங்களுக்குரிய நிதியைப் பெறு வது தொடர்பில் கிழக்கு முதல மைச்சர் செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அனைத்து மாகாண முதல மைச்சர்களின் 33வது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் சனிக் கிழமை ஹபரணை சினமன் வில்லேஜ் ஹோட்டலில் இடம் பெற்றபோது ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன மற்றும் கிழக்கு முதலமைச்சர் ஆகியோருக்கிடை யில் பிரத்தியேக சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போதே இந்த வேண்டு கோள் முதலமைச்சரால் ஜனாதி பதியிடம் விடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 4784 ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவ தற்கு தேசிய முகாமைத்துவ திணைக் களத்தினால் வழங்கப்பட்ட அனுமதி மற்றும் அது தொடர்பான விரிவான தரவுகள் அடங்கிய ஆவணங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முதலமைச்சர் கையளித்ததுடன், துரித கதியில் நிதியைப் பெற்றுத்தர உத்தரவிடுமாறு முதலமைச்சரால் வேண்டு கோள்விடுக்கப்பட்டது.

இதனையடுத்து நிதி ஆணைக் குழுவின் செயலாளரை அழைத்த ஜனாதிபதி, எதிர்வரும் வாரங் களில் கிழக்கு மாகாண சபை யுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து விரைவில் நிதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்ததாக முதல மைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக் கமைய எதிர்வரும் வாரங்களில் நிதி ஆணைக்குழ மற்றும் முதல மைச்சருக்கிடையிலான சந்திப் பொன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இறக்காமம் மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்டுள்ளமை மற்றும் அங்கு சிறுபான்மையினரின் காணிகளில் அத்துமீற முன் னெடுக்கப்படும் முஸ்தீபுகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்த முதலமைச்சர் அது தொடர்பில் இறக்காமம் சிவில் சமூக பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்ட ஆவணங்களையும் ஜனாதிபதி யிடம் கையளித்தார்.

முதலமைச்சர்களின் 33வது மாநாட்டுக்கு இலங்கையின் 9 மாகாண முதலமைச்சர்களுடன் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களும் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாரால் யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்வாகக் கட்டட நிர்மாணம் கட்டம் -II வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. பொது நிதிச்சுற்றறிக்கை 4/2016ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது வடமாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 08.05.2017 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3 மணி வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் நிர்வாகக் கிளை,மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் தொலைபேசி இல - 021 222 2233, 021 222 2234 நீடிப்பு : 111 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டுமேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

5. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை நிர்வாகக் கிளை மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 08.05.2017முதல் 24.05.2017 வரை காலை 9.00மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 3500 ரூபாய் கட்டணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.05.2017 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 26.05.2017 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

8.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

9.Prebid Meeting 22.05.2017 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

(அ-8501)

| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/ADM/ CON.WO RK/JAFFNA-II/ 11/07/2017 | யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்வாகக் கட்டட நிர்மாணம் கட்டம்-II | 7.90 | 04 | C7 | 120,000.00 | 3500/- |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# இலங்கையின் நிதி நிலைமை அபாயக் கட்டத்தில்

## - உலக வங்கி எச்சரிக்கை

இலங்கை அரசின் வருமானத்தினை அதிகரிக்க வேண்டியது அவசியம் என உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர் வலியுறுத்தினார். 2 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்த அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையின் நிதி நிலைமை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளதாகவும், நிகர தேசிய வருமானத்தின் வீதத்திற்கமைய 10 வீத வரி வருமானமே உள்ளதால், அரசாங்கம் வரி வருமானத்தினை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொழில்புரிபவர்களின் வருமானத்தினை அதிகரிப்பதனையும் முதலீடுகளினூடாக மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து, வெளிநாட்டு முதலீடுகளுக்கான சூழலை உருவாக்குவதன் மூலமும் இந்த இலக்குகளை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும் என உலக வங்கியின் உப தலைவர் தெரிவித்தார்.

# புதிய நிறுவன பதிவு

## கட்டணம் 73%ஆல் குறைப்பு

இலங்கையில், புதிய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணத் தொகை 73 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின்படி, ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணத் தொகை 15 ஆயிரம் ரூபாயில் இருந்து நான்காயிரம் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு புதிதாகப் பதிவு செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்திருந்தது. இதனால், வியாபாரப் பதிவுகள் மூலமான வருவாயும் அதிகரித்தது.

2015ஆம் ஆண்டு 632 மில்லியன் ரூபாயாக இருந்த இந்தத் தொகை, கடந்த வருடம் ஏறக்குறைய இரண்டு மடங்காகி 1.78 பில்லியன் ரூபாயாக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு-மெல்பேர்ன் நேரடி விமான சேவை

கொழும்பு - மெல்பேர்ன் இடையிலான விமான சேவைகளை இவ்வாண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கவிருப்பதாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி மற்றும் மெல்பேர்ன் ஆகிய நகரங்களுக்கும் இலங்கைக்குமான விமான சேவைகள் பல ஆண்டுகளுக்கு முன் கைவிடப்பட்டதாகவும், கைவிடப்பட்ட சேவைகளை மீளத் தொடங்க இரு நாடுகளும் இணங்கியிருப்பதாகவும், இதன்படி ஏ330 எயார்பஸ் ரக விமானம் மூலமான சேவைகளை ஆரம்பிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், கொழும்பு - அவுஸ்திரேலியா இடையிலான ஒரே நேரடி விமான சேவையாக இது இருக்கும்.

வர்த்தக உலகம்
ஆர். எஸ். கே. முருகதாஸ்

# முடிவெடுக்கும் பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம்

தொழில் ரகசியம்

முடிவெடுப்பதில் எப்படி ஐயா நீங்கள். முடிவெடுக்க வேண்டிய விடயத்தை அக்கு வேறு ஆணி வேறாக அடுக்கி அனைத்தையும் நிதானமாக அலசி ஆழமாய் ஆராய்ந்து அதற்கப்புறமும் அனேகமாக முடிவெடுக்க முடியாமல் அவதிப்படுபவரா?

நன்று. கையை கொடுங்கள். நாமும் அப்படித்தான். இன்னும் சொல்லப் போனால் நாம் அனைவருமே அப்படித்தான். பலரை பரவலாய் பிடித்திருக்கும் இந்த வியாதிக்கு பெயர் 'முடிவு பக்கவாதம்'. முடிவெடுக்கும்போது ஏகப்பட்ட தெரிவுகள் இருந்து, அனைத்தையும் அலசிக்கொண்டே இருந்து, எதை எடுப்பது எதை விடுப்பது. எதை தொடுவது, எதை விடுவது என்று முடிவெடுக்க முடியாமல் அவஸ்தைப்படும் வியாதி. தொலைக்காட்சியில் எதைப் பார்ப்பது என்று புரியாமல் சனலை நீங்கள் மாற்றிக்கொண்டே இருப்பதும் அதே இந்த வியாதியினாலேயே.

ஒன்றும் வேண்டாம், அற்ப தோசை. அதிலேயே ஆயிரத்தெட்டு வகைகள். ஹோட்டல் சென்று அங்கு மெனு கார்டை பார்த்தால் பாடசாலைக் காலத்தில் படித்த புத்தகங்களே பரவாயில்லை என்பது போல் குழப்பம். எதை தின்பது என்று திண்டாட்டம். 'சே. பேசாமல் நமக்கு தெரிந்த 'ஒரு தட்டம் தோசை. ரீ' என்று கேட்டு போட்டதை தின்றுவிட்டு போய் தொலைத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. ஆயிரத்தெட்டு தெரிவுகள் இருக்கும் போது அதிலிருந்து ஒன்றை தேர்ந்தெடுக்க முடியாமல் மனம் திண்டாடுகிறது. இதுதான் முடிவு பக்கவாதம்!

'தேர்ந்தெடுக்க தெரிவுகள் இருப்பது நமக்கு அளிக்கப்படும் வரம் போலத் தெரியும். ஆனால் அதிலிருந்து ஒன்றைத் தேர்வு செய்யும் சோதனை நமக்கிடப்படும் சாபம்!

இந்த வியாதியிலிருந்து விமோசனம் உண்டா? உண்டு. உங்கள் அணுகுமுறையில் சில மாற்றங்களை செய்ய நீங்கள் தயாராய் இருந்தால் முடிவெடுக்கும் பிரச்சினைக்கு முடிந்தவரை முடிவு கட்டி முடிக்க முடியும்!

முடிவெடுக்க வேண்டிய வேலை அதை முடிக்க தரப்படும் நேரத்திற்கு ஏற்ப விரியும் தன்மை கொண்டது. இதற்கு 'பார்கின்ஸன்' விதி என்று பெயர். ஒரு வேலையை முடிக்க எத்தனை நேரம் தரப்படுகிறதோ அத்தனை நேரத்தை எடுப்போம். முடிவெடுப்பதும் ஒரு வேலை தானே. அரை நொடிக்குள் முடிவெடுக்க வேண்டும் என்றால் அரை மணி நேரம் எடுப்போம். அதே முடிவை மூன்று நாட்களுக்குள் முடிவெடுக்க வேண்டுமென்றால் மூன்றாவது நாள் முடிவில் முடிவெடுப்போம். கடைசி நேரம் வரை காத்திருந்து முடிவெடுக்கும் போது முடிவு பக்கவாத வியாதி இன்னும் முற்றிப் போய் நம்மை பாடாய்படுத்தும். அதனால் முடிவெடுக்க ஒரு நேர காலத்தை வரையறுத்து அதற்குள் முடிவெடுக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி முடிவெடுப்பது உசிதம். கடைசி நேரம் வரை வைத்து செய்ய நினைத்தால் அத்தனை தெரிவுகளும் அமோகமாக நம்மை சேர்த்து வைத்து செய்யும்!

முடிவெடுக்க முடியாது தவிக்க ஒரு முக்கிய காரணம் இருக்கும் தெரிவுகள் அனைத்துமே முக்கியம் என்பதுபோல் நமக்குத் தோன்றுவதால். உங்கள் பிராண்டிற்கு பத்திரிகை விளம்பரம் தயார் செய்யும் போது உங்கள் பிராண்ட் பற்றிய அனைத்து தகவல்களும் அவசியம் போல் தோன்றி அனைத்தையும் எப்படியாவது விளம்பரத்தில் நுழைக்கத்தான் மனம் நினைக்கும். அப்படி செய்யும் போது தான் பத்திரிகை விளம்பரம், கேள்வி அறிவித்தல் விளம்பரம் போல் மாறி பார்க்கவே கண்றாவியாய் இருக்கிறது. எதற்கு விளம்பரம், எந்த விடயத்தை சொல்ல விரும்புகிறோம் என்பதை முதலில் தெளிவாய் புரிந்துகொண்டு பிறகு முடிவெடுக்க தொடங்குங்கள். அப்படி செய்யும் போது தேவையானவை மட்டுமே கண்ணில் படும். தேவையற்றவை, அதிமுக்கியமில்லாத தெரிவுகளை ஒதுக்கித் தள்ளமுடியும். சுலபமாக முடிவெடுக்க முடியும்!

ரீ-ஷேர்ட் போல் முடிவெடுப்பதிலும் சிறியது, நடுத்தரம், பெரிது என்று அதன் முக்கியத்திற்கேற்ப அளவு உண்டு. முடிவின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப நேரத்தை முயற்சியை செலவழிப்பதே புத்திசாலித்தனம். திருமண ஏற்பாட்டிற்கு ஏகப்பட்ட நேரத்தை செலவழிக்கும் பலர் திருமணத்திற்கு மணமகன், மணமகள் தேர்வில் நேரத்தை செலவழிக்காமல் இருப்பதால் தான் விவாகரத்துகள் பெருகி வருகின்றன. இதை உணர்ந்தால் முடிவெடுக்கும் விடயத்தின் வீரியத்திற்கு ஏற்ப நேரம், முயற்சி செலவழிக்கும் முக்கியத்துவம் புரியும்!

எடுக்கும் முடிவால் ஏற்படும் விளைவுகள் எத்தகையவை? முடிவு தவறாகிப் போனால் அதிக பட்சம் என்ன ஆகும்? இதை உணர்ந்து அதற்கேற்ப முடிவெடுக்க முயற்சிப்பது நன்று.

பாடசாலை பரீட்சையில் பல் தேர்வு தெரிவு என்ற ஒன்று உண்டே ஞாபகம் இருக்கிறதா? கேள்விக்கு நான்கு பதில்களை தந்து அதில் எது சரியான பதில் என்று புள்ளடி செய்யும் வகை. அதை எப்படி அணுகினோம் என்று யோசித்துப் பாருங்கள். தரப்பட்ட 4 தெரிவுகளில் எது கண்டிப்பாக தவறு என்று நினைத்தோமோ அதை முதலில் ஒதுக்கினோம். பின் மீதமுள்ள தெரிவுகளை மட்டும் யோசித்து தெரிவு செய்தோம். வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் கூட முடிவெடுக்கும் சூழ்நிலைகளில் பல தெரிவுகள் இருக்கும். முதல் காரியமாக அதில் தவறான அல்லது சரியில்லாத தெரிவுகளை எவையோ அதை ஒதுக்குங்கள். மீதமுள்ள தெரிவுகளை அலசுவது கொஞ்சத்துக்கு கொஞ்சம் எளிதாவதை உணர்வீர்கள்.

ஹோட்டலில் தனியாய் சென்று சாப்பிட உட்கார்ந்து தெரியாத் தனமாக 'என்னப்பா இருக்கு' என்று கேட்கிறீர்கள். அவர் கடகடவென்று ஏகப்பட்ட வகைகளை அடுக்குகிறார். எதை தெரிவு செய்வது என்று புரியாமல் அவரிடமே 'நீங்களே எது நன்றாக இருக்கும் என்று சொல்லுங்கள்' என்று கேட்கிறீர்கள். நீங்கள் அறியாத. ஊர் பெயர் தெரியாத ஒருவரிடம் முடிவெடுக்க உதவி கேட்கிறீர்கள். ஏன்?

ஏனெனில் நம்மை விட அவருக்கு அந்த உணவுகளைப் பற்றியும் அதன் தரம், சுவையை பற்றியும் அதிகம் தெரியும் என்று நாம் நினைப்பதால். தான் சொன்னது சரியில்லை என்றால் நீங்கள் கோபப்படுவீர்கள் என்பது அவருக்கு தெரிந்திருப்பதால். உங்களுக்கு திருப்தியில்லையென்றால் டிப்ஸ் தரமாட்டீர்கள் என்று அவர் அறிந்திருப்பதால். இத்தனை இருப்பதால் நல்லதையே அவர் சொல்வார் என்று நீங்கள் நம்புவதால்.

முடிவெடுக்கும் பொறுப்பு உங்களுடையதென்றாலும் அவர் ஆலோசனை பெறுகிறீர்கள். இதை உங்கள் ஊழியர்களிடம் செய்யலாமே. எல்லா முடிவுகளையும் நீங்களே எடுக்க முயற்சிப்பதால் தான் முடிய மாட்டேன் என்கிறது. முடியை பிய்த்துகொள்ள வேண்டியிருக்கிறது.

முக்கால்வாசி முடிவுகள் தவறாகியும் போகிறது. எதைப் பற்றி முடிவெடுக்க வேண்டுமோ அத்துறையை, அதைச் சார்ந்த ஊழியர்களின் உதவியை நீங்கள் நாடலாமே. இருக்கும் தெரிவுகளை அலசும் அறிவும் அனுபவமும் உங்களை விட அவர்களுக்கு அதிகமென்றால் அவர்கள் அறிவுரையை நீங்கள் நாடலாமே. தெரியாத உணவகத்தினரின் பேச்சை கேட்டு நடக்கும் நீங்கள் உங்கள் ஊழியர் பேச்சை கேட்டால் குறைந்தா போவீர்கள்.

தலை என்று ஒன்று இருந்தால் தலைவலி வந்தே தீரும் என்பதுபோல் முடிவெடுக்கும் தருணங்களில் முடிவு பக்கவாதம் என்ற நோய் வந்தே தீரும். இதை முழுவதுமாய் நிவர்த்தி செய்ய முடியாவிட்டாலும் வியாதியின் வீரியத்தை குறைக்க வெகுவாக முடியும். குறைக்க வேண்டும் என்று முடிவெடுத்தால் முடியும்!

# பங்குச் சந்தை விபரம்

CSE

## (வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,610.46 | 6,640.57 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,786.39 | 3,801.69 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,928.427 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** பிரக் லங்கா பின்னன்ஸ்(16.50), கூஜே (52.30), அமானா தகபுல்(1.10), புளூ டைமன்ஸ்(X)(0.50), பிறின்ட்கெயர்(36.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** செலின்சிங்(1,109.10), ஈபி கிரேஸி(1,110.50), ஹறிச்சந்திர(2,315.40), சிஜஎப்எல்(0.80), ரடியன்ட் ஜெம்(25.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

## (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.42 | 154.22 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.52 | 200.10 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 164.08 | 170.30 |
| சுவிஸ் பிராங் | 151.47 | 157.47 |
| கனேடிய டொலர் | 108.64 | 112.95 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.21 | 115.19 |
| சிங்கப்பூர் டொலர் | 106.92 | 110.85 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை | 2.36 |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை | 41.39 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிறுவர் அரங்கம்

# ஆமையும் அழகிய பெண்ணும்

ஒரு காலத்தில் நைஜீரிய தேசத்தை ஓர் அரசன் மிகுந்த ஆளுமையுடன் ஆண்டு வந்தான். குடிமக்கள் மட்டுமல்ல. விலங்கு களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து இருந்தான். அவனுக்கு எக்பன்யான் என்ற மகன் இருந்தான். அவன் ஒரு நிலை யில்லாத சிந்தனை உள்ளவன். அவனுக்கு நிறைய மனைவிகள் இருந்தும் யாரையும் விரும்பா மலும் நேசிக்காமலும் இருந்தான். அதனால் மன்னன், மகனின் கண்ணில் படும் அழகான பெண்களையெல்லாம் அவனுக்கு மனைவியாக்கி வைத்தான். பெண்ணின் தாயோ, தந்தையோ சம்மதிக்க வில்லையென்றால் அவர்களைக் கொன்று விடும் துர்க்குணம் கொண்டிருந்தான். அந்நாட்டில் மிகவும் புத்திசாலி யான ஆமை ஒன்று இருந்தது. அந்த ஆமையின் மனைவியும், மகளும் மிகவும் அழகான வர்கள். மகள். இளவரசன் கண்ணில் பட்டுவிடாமல் இருக்க ஆமை. அவளைப் புதர்களில் ஒளிந்து இருக்க வைத்தது. ஒருநாள் அந்த ஆமை, உணவு க்காக தனது வயலில் வேலை செய்வதற்காகத் தன் மனைவி யுடன் சென்றிருந்தது. அந்த நேரத்தில் பறவைகளை வேட்டையாடிக் கொண்டிருந்த இளவரசன் ஒரு பறவையை நோக்கி அம்பைத் தொடுத்தான். அந்தப் பறவை பொத்தென்று புதர் அருகில் விழுந்தது. ஆமையின் மகள் அதைப் பார்த்து கலக்கம் அடைந்தாள். பறவையோ அவளின் அதீத அழகை ரசித்த படி இருந்தது. அதை அவள் எடுத்து அன்புடன் தடவிக் கொண்டிருந்தாள். அப்போது பறவையைத் தேடி புதரின் அருகில் வந்த படைவீரன் ஒருவன். அழகின் உருவமாக இருந்த ஆமைப் பெண்ணைப் பார்த்து வியந்து போனான். அவன் ஓடிப் போய் இளவர சனிடம். அழகான பெண் ஒருத்தி புதருக்குள் ஒளிந்து இருக்கும் விடயத்தைச் சொல்லி விட்டான். அதைக் கேட்ட இளவரசன் விரைந்து வந்து புதர் அருகில் சென்றான். அந்த அழகிய ஆமைப் பெண்ணை பார்த்ததும் அவனது கண்கள் விரிந்தன. அவன் வாழ்நாளில் அத்தகைய அழகிய பெண்ணைப் பார்த்ததே யில்லை. அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த கணமே அந்த பெண்ணைத் தனது மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டான். அந்த அழகியும் அவனை உற்றுநோக்கிக் கொண்டிருந்தாள். பிறகு அவளுடன் பேச்சுக் கொடுத் தான். அவளும் அவனுடன் பேச ஆரம்பித்தாள். வெகு நேரம் அந்தப் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்த அவன். அவள் அவனை ஏற்றுக் கொண்டு மனைவியாகத் தயார் என்று சொல்லும் வரை பேசிக் கொண்டிருந்தான். பின்னர் அரண்மனைக்குத் திரும்பி னான். மன்னரான தனது தந்தையிடம் அந்த ஆமையின் மகளைச் சந்தித்தது பற்றிக் கூறாமல் மறைத்து விட்டான். மறுநாள் காலையில் ஆறு துணித் துண்டுகள், முந்நூறு மரத்துண்டுகளைப் பரிசாக ஆமையின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அன்று பிற்பகலில். ஆமையின் வீட்டுக்குச் சென்ற இளவரசன் ஆமையிடம். தான் அந்தப் பெண்ணை மணக்க விரும்புவதாகவும் அவளுக்காக எவ்வளவு நாட்கள் வேண்டு மானாலும் காத்திருக்கத் தயார் என்றும் கூறினான். ஆனால் ஆமை மிகவும் பயந்தது. மன்னனுக்கு இந்த விடயம் தெரிந்தால் தன்னைமட்டுமல்ல. மனைவி. மகள் என எல்லோ ரையும் கொன்று விடுவான் என்று பயத்தின் உச்சியில் சொன்னது. ஆனால் இளவர சனான மன்னனின் மகனோ ஆமையிடம். அப்படி ஏதும் நடக்காமல் தான் பார்த்துக் கொள்வதாக சொல்லிச் சமாளித்தான். ஆமையும் அவனது வார்த்தையை நம்பியது. இளவரசனோ தன் தாயிடம் சென்று. ஆமை அழகி பற்றிக் கூறினான். அவருக்கும் அரசரின் பிடிவாத குணம் பற்றிய வெறுப்பு இருந்தது. அவர். அரசருக்குத் தெரியாமல் அந்த ஆமைக் குடும்பத்தின் வீட்டுக்குச் சென்று அந்தப் பெண்ணைப் பார்க்க முடிவு செய்தார். உடை. உணவு வகைகள் மற்றும் தங்க நகைகளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

தன் மகனான இளவரசன் திருமணம் செய்துகொள்ள விரும்பிய ஆமையின் மகளைப் பார்த்தார். தான் கொண்டு வந்திருந்த பொருட்களையும் கூடவே ஆலிவ் எண்ணெயையும் அந்த அழகிக்குப் பரிசளித்தார். அந்த ஆமையிடம். ""என் மகனே. உன் மகளை மணந்து கொள்வான். வேறு யாருக்கும் அவளை மணம் பேச வேண்டாம்"" என்று உறுதியாகக் கூறினாள்.

(தொடரும்)

## 05.2017 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1450 - இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக்' கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம் பெற்றது.
- 1821 - கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக் கப்பட்டது.
- 1886 - ஜோன் பெம்பர்ட்டன் கொக்கா கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டுபிடித்தார்.
- 1902 - கரிபியன், மார்டீனிக் தீவில் பெலே எரிமலை வெடித்ததில் 30,000 பேர் கொல்லப் பட்டனர்.
- 1914 - பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலை கொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணு வத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1945 - அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக்காணக்கான அல்ஜீரி யர்கள் பிரெஞ்சுப்படைகளினால் கொல்லப் பட்டனர்.
- 1945- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனை யின்றி சரணடைந்தனர்.
- 1984 - லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிக்கப் போவ தாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 2007 - புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

பிறப்புக்கள்

- 1828 - ஹென்றி டியூனாண்ட். செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் (இ.1910)
- 1916 - சுவாமி சின்மயானந்தா. இந்திய ஆன்மீகவாதி (இ. 1993)

இறப்புகள்

- 1947 - ரொபேர்ட் ஹோர்விட்ஸ். மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951 - மு. நல்லதம்பி. ஈழத்துப் புலவர்

சிறப்பு நாள்

- உலக செஞ்சிலுவை நாள்
- ஐரோப்பா - வெற்றி நாள் (1945)
- தென் கொரியா - பெற்றோர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 140 | 90 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 140 | 80 | 140 | 120 | 100 |
| தக்காளி | 150 | 150 | 120 | 120 | 90 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 80 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 160 | 60 | 200 | 120 | 160 | 160 | 160 |
| கரட் | 200 | 300 | 250 | 200 | 180 | 240 | 200 |
| பூசணி | 50 | 60 | 50 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 120 | 120 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 220 | 200 | 140 | 240 | 180 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 100 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 200 | 200 | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 150 | 100 | 80 | 80 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 100 | 120 | 90 |
| பயற்றங்காய் | 100 | 200 | 150 | 80 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 150 | 100 | 140 | 140 | — | 160 | 160 |
| கறிமிளகாய் | 120 | 200 | 160 | — | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 150 | 200 | 140 | 250 | 200 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 180 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 60 | 100 | — | 80 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 30 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 60 | 60 | 40 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 80 | 70 | 65 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 300 | 200 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 120 | 100 | — | — | — | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 60 | 90 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 70 | 50 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஊர்பனா | — | 60 | 60 | — | — | — | — |

பெரும்பாலும் முதல் சிந்தனை தெளிவற்றவையாக இருக்கும். எதற்கும் மறுசிந்தனை செய்யுங்கள்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலை மட்டும் பேசி சீவியம் நடத்த நினைத்தால்...

நிலைமைகள் முற்றுமுழுதாக மாறி வருகிறது. மக்களின் தேவைகள் வேறாக இருக்க, நம் அரசியல்வாதிகள் இன்னும் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர்.

நல்லாட்சியின் ஆயுள் சடுதியாக குறைந்து வருகிறது. நல்லாட்சியை தமிழர்கள் எதிர்த்தால் அது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்கு சாதகமாகி விடும் என நம் அரசியல் தலைமை கூறுகிறது.

நல்லாட்சியைத் தமிழர்கள் எதிர்க்கவில்லை என்பதாலேயே மகிந்த ராஜபக்ஷவின் மே தின எழுச்சிக் கூட்டத்தில் இலட்சக்கணக்கான சிங்கள மக்கள் பங்கேற்றுள்ளனர்.

இவ்வாறு இலட்சக்கணக்கான சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மே தின எழுச்சிக் கூட்டத்தில் அணி திரண்டனர் என்பதற்கு பின்னால்,

மகிந்த தரப்பு மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் சிங்கள மக்களிடம் விரைவாக செல்லுபடியாகிறது என்றறிவதும் அவசியமானதாகும். எது எப்படியாயினும் அடிப்படை வாழ்வாதாரம் என்பது மிகவும் முக்கியமானது.

அடிப்படை வாழ்வாதாரத்துக்குரிய கட்டுமானங்கள் பற்றி நாம் சிந்திக்காமல் வெறுமனே அரசியல் மட்டும் பேசிக் கொண்டிருப்போமாக இருந்தால், தமிழ் அரசியல்வாதிகளை தமிழ் மக்களே தூக்கி எறியும் நிலைமை விரைவில் உருவாகும்.

ஆக, மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்துக்கான கட்டுமானங்கள், கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, உற்பத்தி நிறுவனங்களின் உருவாக்கம் இவை பற்றி சிந்திக்கும் அதே வேளை, சமாந்தரமாக அரசியல் விவகாரங்களையும் முன்னெடுப்பது அவசியமாகும்.

மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தல்; பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களை ஒரு தரப்பு கவனிக்க, மறுபக்கத்தில் இன்னொரு தரப்பு அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பதாகக் கூட இருக்கலாம். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதேவேளை எங்கள் புலம்பெயர் உறவுகளை எங்களோடு இணைப்பதற்கும் அவர்களின் ஆலோசனைகள், உதவிகள், பங்களிப்புக்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் விசேட திட்டம் உருவாக்கப்பட்டு அதனை தனியான குழுமம் கவனிப்பதாக இருக்க வேண்டும்.

குறிப்பாக எங்கள் தமிழர் தாயகத்தின் உற்பத்திப் பண்டங்கள், உணவுப் பொருட்கள் இவற்றுக்கு நல்லதொரு வெளிநாட்டு சந்தை வாய்ப்பு எங்கள் புலம்பெயர் மக்களால் உருவாகியுள்ளது.

முன்பெல்லாம் எங்கள் இடத்து உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு சந்தையில் வாய்ப்பில்லை என்ற ஒரு சூழ்நிலை இருந்தது.

ஆனால் இன்று எங்கள் புலம்பெயர் மக்களால் அந்தக் குறைபாடு நீங்கியுள்ளது.

எங்கள் ஊர் முருங்கைக்காய் முதல் வேப்பம்பூ வடகம், புளுக்கொடியல், ஒடியல், மொட்டைக் கறுப்பன் அரிசி, கைக்குத்தரிசி என எங்கள் மண்ணின் விளைபொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தையில் கிராக்கி உண்டு.

இதை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இது பற்றி எங்கள் பொருளியலாளர்களும் தமது கருத்துக்களைப் பதிவு செய்வது அவசியம்.

தவிர, ஊடகங்களும் தனித்து அரசியல் என்ற எல்லைகளுக்குள் முடங்காமல் மக்களின் வாழ்வாதாரத்தின் பக்கமாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

அப்போதுதான் நாம் கேட்கின்ற உரிமை என்ற விடயத்துக்கு எங்கள் மக்கள் பெறுமதி கொடுப்பர்.

# உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருவருட்பயன் உணர்த்தும் செய்தி

உமாபதி சிவாச்சாரியார் சைவசித்தாந்திகளில் தனித்துவம் பெற்ற ஒருவர். இவரது சுவையான நூல்களில் திருவருட்பயனும் ஒன்றாகும். இத்திருவருட்பயனில் இறைவனை நோக்கும்போது உலகில் எல்லாப் பொருட்களும் "கடவுள்" என்ற ஒன்றினுள் அடங்கி நிற்கின்றது. பிறவற்றை தன்னுள் அடக்கி நிற்கும் பெருநிலை வியாபகம் அதனுள் அடங்கி நிற்பது வியாப்பியம். இதில் கடவுள் வியாபகம் உயிரும் உலகமும் கடவுளிடத்தே வியாப்பியம் ஆகும். காலையில் பல்கனி வழியாக நுழையும் சூரியவெளிக் கற்றையில் மிதக்கும் துகள்கள்தாம் எவ்வளவு சிறியவை. எங்கும் விரிந்து கிடக்கும் அண்ட கோடி எல்லாம் சிறியதாக தோன்றும் படியாக நிற்கும் பெரிய பொருளே இறைவன் எனப்படுகிறது.

இதை உமாபதி,

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மை யான்" என்றார்.

பெருமைக்கு அடுத்த நுண்மையினை நோக்கும் போது பதி பெருமையில் எல்லாப் பொருட்களையும் கடந்து உள்ளத்தால் கடவுள் எனப்பட்டார். நுண்மை என்பது எல்லாப் பொருட்களிலும் கலந்து நிற்கும் கலப்பு நிலையாகும். இதில் இறைவன் எனப்படுகிறார். இறைவன் என்பது இறுத்தல் என்பதற்கு தங்குதல் என்றும் பொருள் படும்.

எனவே தங்கி இருப்பவன் எனப்படுகிறது. தங்கியிருந்து இயக்குபவன் சிவபெருமானே என்று குறிப்பிடப்படுகிறது.

பேரருள் என்று நோக்கும் போது இறைவன் அருளுடையவனாதல் பற்றி கருணைக் கடல் என்று போற்றுவார். எண்ணற்ற உயிர் மேல் இரக்கமுடையவராக காணப்படுகிறார். திருக்குறள் இறைவனை பல பிறவிகளை உள்ளடக்கிய இவ்வுலகில் முதன்மையானவனாக இறைவன் காணப்படுகிறார். உலக தோற்றத்திற்கு இறைவன் ஒருவனே காரணமாக உள்ளான். இதை

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார்.

அடுத்து " அருளில் பெரியது அகிலத்தில்" என்றார் உமாபதி சிவாச்சாரியார். தாகமுற்றவன் தண்ணீரை நாடுவது போல ஆன்மீக நெறியில் செல்லும் சாதகன் திருவருள் ஒன்றே வேண்டி நிற்பான். திருவருளில் நாட்டம் வருவது என்பது எளிதான காரியமில்லை. கண் கண்ட உலக சுகத்தையே பேரின்பம் என்கின்றோம். காணாத திருவருளில் நம்பிக்கை இல்லை. பிறப்பிலும் இறப்பிலும் ஏற்படும் துன்பத்தையும் நன்கு உணர்ந்து அஞ்சுபவர்களே உலகியலில் உலர்ப்பு ஏற்படும். இவர்களே திருவருளுக்கு ஏங்குபவர்கள் ஆவர். எனவே திருவருட்பயன் குறிப்பிட்ட இறைவனின் பெருமை, நுண்மை, பேரருள் திருவருள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதவாழ்வு இரண்டு நிலைகளில் அமைகின்றது. ஒன்று தன்னலமுடையது, மற்றொன்று பொது நலமுடையது. தன்னலம் கடை நிலை வாழ்க்கை, பொது நிலை உயர்நிலைவாழ்க்கை. இதை வள்ளுவர்,

"கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ
உலகு" என்றார்.

மனிதன் தன்னுயிர்போல ஏனையதை நினைத்து ஒத்து அறிந்து வாழ்ந்தால் அவன் மனிதனாக கருதப்படுவான். பிரதிபலன் கருதாது சேவை செய்யவேண்டும் என்பதே இதில் உணர்த்தப்படுகிறது. இதை இறைவன் ஏற்று முத்தி நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுப்பான்.

கு.கோபிராஜ்

## திருப்பதி மலைவாழும் வெங்கடேசா

திருப்பதி மலை வாழும் வெங்கடேசன் இவ்வுலக மக்களுக்கு இன்னொரு தலையாய செய்தியையும் எடுத்துச் சொல்கிறான்.

அது மகிளிரை மதி.

பெண்ணை மிதியாமல், மதிக்கக் கற்றுக் கொடுப்பவன் இந்த மலையப்பன். உலகானது உன்னதமான பெண்மையையும் அவளைத் துணையாகக் கொண்ட ஆண்மையையும் உள்ளடக்கியது. ஆணும் பெண்ணும் இணைந்து ஆற்றும் நல்லறமே இல்லறம். இந்த இல்லறத்தில் மனையாளின் பங்கு மகத்தானது.

மகளிரின் வாழ்வு வாழையை ஒத்தது. உடல், பொருள், ஆவி என அனைத்தும் அவள் சார்ந்த ஆணுக்கும் அவள் ஈன்ற சந்ததியினருக்கும் அர்ப்பணிக்கப்படுவது. அவளே மனையைப் பேணுபவள், வம்சம் தழைக்க சூல் தரிப்பவள். உதிரத்தால் தன்னுள் வளரும் உயிரைக் காப்பவள். இவ்வுலகில் எட்டிப் பார்க்கும் ஒவ்வொரு மனித உயிரும் ஒரு தாயின் கருவறையில் பத்து மாதங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட உயிரே. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பெண்கள் உட்கார்ந்து உணவருந்தக்கூடாது, படுத்து உறங்கக்கூடாது என்றால் பொருள் என்ன?**

இது என்ன கேள்வி? உட்காராமல் உணவருந்துவது எப்படி? படுக்காமல் உறங்குவது எப்படி? என்று சிலர் கேட்கக்கூடும். கேள்வி சரியானதுதான். பெண்கள் உணவருந்த உட்கார்ந்தால் கதைபேசிக் கொண்டு அதிக நேரம் அங்கேயே உட்கார்ந்துவிடும் பழக்கம் பழைய காலம் முதலே வழக்கத்தில் உள்ளது. அது சரியல்ல.

இவ்வாறு அதிக நேரம் உட்கார்ந்து உணவருந்தக்கூடாது என்பதுதான் இதன் அர்த்தமாகும். வேகமாக உணவருந்தி விட்டு எழுந்திருக்க வேண்டும் என்பதாகும்.

அதேபோல் படுக்கைக்குச் சென்று விட்டால் சிலர் எருமை மாடு போல் படுத்துக் கிடப்பார்கள். ஒரு அவசரத்திற்கு அழைத்தாலும் எழுந்திருக்க மாட்டார்கள். அதுவும் நல்ல பழக்கமல்ல. அவசர வேலையானால் எழுப்பினால் உடனே எழுந்திருக்க வேண்டும். இதுதான் அர்த்தம்.

பெண்கள் விரைவாக உணவருந்தவேண்டும், உறங்கும்போது எழுப்பினால் உடனே எழுந்திருக்க வேண்டும். (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அறுகுணச் சீரமைப்பு

அறுகுணம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற பெயர்களில் வடநூலார் குறிப்பிட்டுள்ள ஆறுவகை மனோ நிலைகள். இவை தமிழ் மொழியில் முறையே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என விளக்கப்படுகின்றன. இவை எல்லா உயிர்களிடத்தும் அமைந்துள்ளன. மனிதனிடம் இந்த மனோ நிலைகள் எழுச்சி பெறும் போது தீய செயல்களைச் செய்து விடுவான். அதனால் பொருள் அழிவும், மகிழ்ச்சி இழப்பும் விளையும்.

தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோ நிலைகளில் பேராசையை - நிறை மனமாகவும் சினத்தைப் - பொறுமையுடமையாகவும் கடும் பற்றை - ஈகையாகவும் முறையற்ற பால் வேட்பைக் கற்பாகவும் உயர்வு - தாழ்வு மனப்பானமையை - நேர் நிறையுணர்வாகவும் வஞ்சத்தை - மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளலாம். தனக்கும் பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவிலும், முறையிலும் செயலாற்றி இன்பமாக வாழலாம்.

தேவையும், பழக்கமும் சூழ்நிலைகளும் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக்கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே "அறிவு" எனப்படும். உணர்ச்சிகளால் அறிவு மயங்கித் தனது நிலை மறந்து செயலாற்றினால் அதனை "மயக்கம்" அல்லது "மாயை" என்று கூறுகிறோம். அறிவு நிலை குலைந்த மயக்கத்தில் தான் தீய செயல்கள் விளைகின்றன.

# 2017 வன்னியின் பெரும் கிரிக்கெட் போர் கிளிநொச்சி மகா வித்தியாலயம் வெற்றி

வன்னியின் பெரும் போர் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி.

வன்னியின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் இரு பெரும் கல்லூரிகளான கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் வருடம் தோறும் நடைபெறும் மாபெரும் கடினபந்து சுற்றுப்போட்டி இந்த வருடம் 2017ஆம் ஆண்டு ஏழாவது முறையாக 05.05.2017 காலை ஒன்பது மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுக்கொள்ள அணித்தலைவரால் களத்தடுப்பு தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து துடுப்பெடுத்தாட தயாராகிய புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி அணி 43.3 பந்து பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட் இழப்புக்களிற்கு மொத்தமாக 107 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 45 பந்துப் பரிமாற்றங்களில் 9 விக்கெட் இழப்புக்களிற்கு மொத்தமாக 208 ஓட்டங்களை பெற்ற வேளை தமது வெற்றி இலக்குக்கு ஓட்டங்கள் போதுமென அணித்தலைவரால் தீர்மானிக்கப்பட்டு துடுப்பாட்டத்தை இடை நடுவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிடம் கொடுத்தது.

தமது இரண்டாவது இனிங்ஸினை தொடர்ந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி இரண்டு பந்துகளை எதிர்கொண்ட நிலையில் வெளிச்சம் போதவில்லை என அணித்தலைவரால் விண்ணப்பம் செய்யப்பட்டதை அடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து அடுத்தநாள்மீண்டும் காலை ஒன்பது மணிக்கு தமது ஆட்டத்தை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 24 பந்து பரிமாற்றங் களில் அனைத்து விக்கெட் இழப்புக்களிற்கு மொத்தமாக 41 ஓட்டங்களை பெற்றுக் கொள்ள கிளிநொச்சி மகா வித்தியாலய அணி ஒரு இனிங்ஸ் மற்றும் அறுபது ஓட்டங்களினாலும் ஏழாவது வன்னியின் பெரும் போர் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் குருநகர் பாடும்மீன் வெற்றி

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சமூகத்தினரால், அமரர் T.பத்மநாதன் ஞாபகார்த்தமாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் உதைபந்தட்ட தொடரின், (06.05.2017) அன்று நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடும்மீன் - யாழ் ஜக்கியம் இடையேயான போட்டி 0:0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

அதை தொடர்ந்து இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் குருநகர் பாடும்மீன் கழகம் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)



திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் பாரதி சனசமூக நிலையத்தோடு இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழாவில் 06.05.2017 அன்று நடைபெற்ற பெண்களுக்கான வீதி ஓட்ட நிகழ்வின் பதிவுகள்.

# யாழ்.ஜொலிஸ்ராரை வீழ்த்தியது அரியாலை மத்திய வி.கழகம்

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இலங்கை துடுப்பாட்ட சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கான போட்டியில் 06.05.2017 அன்று நடைபெற்ற போட்டியில் யாழ்.ஜொலிஸ்ரார் அணியினை 126 ஓட்டங்களால் வெற்றி பெற்றது அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடர்

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி சமூகத்தினரால் அமரர் T.P.பத்மநாதன் ஞாபகார்த்தமாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் 06.05.2017 அன்று நடைபெற்ற போட்டியில் இளவாலை சென். ஜோட்ஸ் அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது ஞானமுருகன் அணி.

அணி சார்பாக ஜெகன் ஒரு கோலினையும் நேர்உதை மூலம் சுபாஸ் சிறப்பான ஒரு கோலினையும் போட்டனர். (க)

## மகேசன் வெற்றி

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம் - தம்புறுவளை விளையாட்டுக்கழகத்தினுடனான போட்டியில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

**பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக எல்லே போட்டியில் சம்பியனான எல்லே அணியை படத்தில் காணலாம்.**

## வாகன விபத்து...

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் இராமகிருஷ்ண பாட சாலைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் எதிர் திசையிலிருந்து பயணித்த ஆட்டோவுடன் நேருக்கு நேர் மோ தியதில் மோ.சைக்கிளில் பயணித்த இரு வரும் படுகாயமடைய நேரிட்டது.

இவ் விபத்தில் வசாவிளான் தெற்கு வசா விளானை சேர்ந்த சிங்கராசா கிருசாந்தன் (வயது 19) ஊரெழு கிழக்கு அல்வாயை சேர் ந்த சிறிகாந்தன் சுரேஷ் (வயது 19) ஆகி யோரே படுகாயமடைந்தவர்களாவார்.

இந்நிலையில் விபத்து தொடர்பில் கோப் பாய் பொலிஸார் விசாரணையை மேற் கொண்டு வருகின்றனர். (செ-30)

## கார்கில்ஸ்...

காத்திருப்பது குறித்தோ அந்த நிர்வாகம் எந் தக் கருசனையும் கொள்ளவில்லை என்று விசனம் தெரிவிக்கும் பொதுமக்கள்,

ஒவ்வொரு காட்சி நேரத்துக்கும் 15 நிமிட ங்கள் முன்னதாக ரிக்கெட் வழங்கும் கவுண் டர் திறக்கப்பட்டு மூன்று நான்கு பேருக்கு மட் டும் ரிக்கெட் வழங்கிவிட்டு ரிக்கெட் முடிந்து விட்டதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இதைப்பார்க்கும் போது வரிசையில் காத்து நிற்பவர்களுக்கு ரிக்கெட் வழங்கப்படா மல் கறுப்புச் சந்தையில் ரிக்கெட் விற்கப்படுகி றதோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளதாக அங்கு ம[illegible]த்தியாலக் கணக்கில் காத்து நின்றவ ர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இதேவேளை காற்றாடி வசதிகளோ, குளி ரூட்டல் வசதிகளோ எதுவும் இல்லாமல் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்வ தாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திரையரங்கில் பொதுமக் களைப் பாதிக்கும் வகையில் நடைபெறும் செயற்பாடுகள் குறித்து யாழ்ப்பாண அரச அதிபர் உடன் விசாரணை நடத்த வேண்டும் எனவும் அங்கு காத்து நின்ற மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (அ)

## இலங்கை தொடர்பில்...

பரிந்துரைகள் தொடர்பாகவே அன்றைய தினம் விவாதம் நடைபெறவுள்ளது.

இதன்போது ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டு உரையாற்றவுள்ளார். அதன் பின்னர் இல ங்கை பதிலளித்து உரையாற்றும். தொடர்ந் தும் மனித உரிமை பேரவை உறுப்பு நாடு கள் இலங்கை தொடர்பான தமது நிலைப் பாட்டை அறிவிக்கவுள்ளன.

இம்முறை இலங்கையின் சார்பில் ஜெனிவா மனித உரிமை பேரவைக்கான வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

இலங்கை குறித்த அறிக்கையை வெளி யிட்டுள்ள ஐக்கிய நாடுகளின் விசேட நிபுணர் மொனிகா பின்டொ சாட்சி பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர் தொடர்பான பொறிமுறை உடனடியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அத்துடன் அர் த்த முள்ள பாதுகாப்பு இதில் இடம்பெறவேண் டியது அவசியம்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் இரு க்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பரந்துபட்ட நடவடிக்கைகள் அவ சியமாகும் என்றும் அவர் பரிந்துரை செய்து ள்ளார்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப் பட்ட பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் மிகவும் வலுவான நடவடிக் கைகளை எடுக்க வேண்டும். நிலைமாறு கால நீதிப்பொறிமுறை சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் நம்பகரமானதாகவும் அமைய வேண்டும் என்றும் மொனிகா பின்டொ கூறியுள்ளார். (செ)

## நினைத்த நேரத்தில்...

சிங்கள நாளிதழான திவயினவுக்கு வழ ங்கிய நேர்காணலிலேயே மகிந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

தற்போது நாட்டில் நடக்கும் விடயங் களை பார்க்கும் போது ஆட்சி கவிழ்க்கும்

# மகிந்தவால் ஏற்பட்ட பெருங்கடனை திருப்பிச் செலுத்த போராடுகிறோம்!

## அடுத்த வருடம் 96 ஆயிரம் கோடி என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பெற்றுக் கொண்ட பெருமளவு கடன் பணத்தினை மீள் செலுத்துகைக்காக அடுத்த வருடத்தில் 96 ஆயிரம் கோடி ரூபாயினை செலுத்த வேண்டியுள்ளது என பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தகவல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டா ளர்களை பதுளையில் நேற்று சந்தித்து உரையாற்றிய போது பிரதமர் இவ்வாறு குறி ப்பிட்டுள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அவர்.

தொழிற்சங்கங்கள் அதிகாரத்தைக் கையிலெடுத்து செயற்படுவதை நாம் எதி ர்ப்பது மாத்திரமல்ல. அதற்கு எதிராகக் கடு மையாக நடவடிக்கை எடுப்போம். எங்களை அனுப்பிவிட்டு பொறுப்பெடுப்பதற்கு யார் இரு க்கின்றனர்?

கடந்த வருடக் கடனை செலுத்த முடியாது என கூறினர். எவ்வாறாயினும், கடனை செலுத்தி IFM அமைப்புடன் தொடர்பு கொண்டு பேசி, எல்லாவற்றையும் செய்தோம். எதிர் வரும் 2018ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பெற்றுக் கொண்ட கடனை 96 ஆயிரம் கோடி ரூபாயினை செலுத்த வேண் டியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ 96 ஆயிரம் கோடி ரூபாய் கடனை செலுத்த முடியாமையால் தான் ஜனாதிபதி தேர்தலை நடத்தியுள்ளார். நாங்களும் இப்போது சென்றுவிட்டால் யார் அந்த தருணத்தை நோக்கி விடயங்கள் நகர் வதை அனைவராலும் உணர்ந்துகொள்ள முடியும்.

அதிகாரம் எவ்வாறு கைமாறும் என்பது தொடர்பில் என் அளவுக்கு அறிந்து வைத்து ள்ள எவரும் இருக்க முடியாது. எம்மிடமிரு ந்து ஆட்சி சொல்லிவிட்டு நழுவிச்செல்ல வில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலில் உத்தி யோகபூர்வ முடிவு வரும் முன்னமே நான் வீட்டுக்கு சென்று விட்டேன். தற்போது எங் கள் கைகளுக்கு பிடி வந்துள்ளது. எந்த நேரத் தில் எவ்வாறான அணுகுமுறைகளை மேற் கொண்டு ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்ற விடயத்தை நாம் மிக நுணுக்கமாக கையாள்கிறோம். சரியான நேரத்தில் சரி யான தீர்மானத்தை மேற்கொண்டு ஆட் சியை மாற்றுவோம் என மகிந்த தனது நேர் காணலில் தெரிவித்துள்ளார். (செ)

இவற்றினை செலுத்தவுள்ளனர்? அதை செய்யக்கூடிய ஒரே சக்தி இங்குதான் இருக் கிறது.

எதிர்வரும் மூன்று வருடங்களில் 1500 கோடி டொலர் வெளிநாட்டுக் கடனை செலு த்த வேண்டியுள்ளது. புதிய கடனாகக் குறை ந்த வட்டியில் 150 கோடி டொலர் கடனினை நாங்கள் அண்மையில் பெற்றுக்கொண் டோம்.

ஆனால் மகிந்த தரப்பினர் இதனை செய்ய வில்லை. அவர்களால் இதை செய்யவும் முடியாது என பிரதமர் குறிப்பிட்டார். (செ-11)

# விபத்துக்குள்ளானது ஹயஸ்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்துகொண்டிருந்த ஹயஸ் வாகனம் ஒன்று வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பற் றைக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில்

### ஐவர் படுகாயம்

அதில் பயணம் செய்த 5 பேர் படுகாயமடை ந்துள்ளனர்.

மேற்படி விபத்து சம்பவம் பளை முள்ளி யடி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் குறித்த ஹயஸ் வாக னம் பயணித்துக் கொண்டிருந்த வேளை ஸாரதி தூக்க மயக்கத்தில் இருந்ததன் கார ணமாக மேற்படி விபத்து இடம் பெற்றுள்ள தாக பளை பொலிஸார் முதற்கட்ட விசார ணையின் போது தெரிவித்துள்ளனர்.

இதில் காயமடைந்த 5 பேரில் 3 பேர் பளை வைத்தியசாலையிலும் மேலதிக சிகிச்சை க்காக 2 பேர் யாழ்ப்பாண போதனா வைத் தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ள னர். (செ-9)

# போராளிகளின் எதிர்காலத்தை மீட்டெடுப்பதே நோக்கம்!

## புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முன்னாள் போராளிகளின் எதிர்கால த்தை மீட்டெடுக்க வேண்டும் என்பதே தமது கட்சியின் முக்கியநோக்கம் என புனர்வாழ் வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைபுலிகள் கட்சி யினர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினர் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஊடகசந்திப்பு ஒன்றை புதுக் குடியிருப்பு மத்தியகல்லூரி கலையரங்கில் நடத்தினர்

இங்கு கருத்து தெரிவித்த அவர்கள், புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிக ளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண் டும் எனவும் பொதுமக்களின் வாழ்வாதாரம் உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும் என்பதே தமது நோக்கம் என தெரிவித்துள்ளதுடன் தமிழ்த்தேசிய கூட் டமைப்பு மக்களுக்கு தீர்வை பெற்றுக் கொடு ப்பதற்கு இதய சுத்தியுடன் செயற்படவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளனர். (செ-281)

# உலகின் மிகப்பெரிய நட்சத்திர ஆமை

## இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

உலகில் பதிவாகிய மிகப்பெரிய நட்சத்திர ஆமை இலங்கையின் பிரதான தேசிய பூங்கா ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்கு முன்னர் உலகில் இவ்வளவு பெரிய ஆமை ஒன்று நேரடியாக கண்டுபிடிக்கப்படவில்லை என வனவிலங்கு கால்நடை வைத்திய சங்கத்தின் தலைவர் கால்நடை வைத்தியர் விஜித பெரேரா தெரி வித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி பூங்காவில் கண் காணிப்பில் ஈடுபட்டிருந்த காவலர் இந்த ஆமையை அடையாளம் கண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கால்நடை வைத்தியர் விஜித பெரேரா உட்பட ஆய்வாளர்கள் குழு வினால் இந்த ஆமை கண்காணிக்க ப்பட்ட தன் பின்னர் ஆமையின் நிறை 14 கிலோ கிராம் எனவும், கீழ் பகுதி (carapace ) 45 சென்றி மீற்றர் எனவும், ஆமையின் மேல் ஓடு 22 சென்றி மீற்றர் எனவும், நீளம் 42 சென்றி மீற்றர் எனவும் கண்டுபிடிக்கப்பட்டு ள்ளது.

ஆமைகளுக்குள் நட்சத்திர ஆமை உலக நாடுகளுக்குள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளு க்குள் உள்ளதாகவும், இந்த நட்சத்திர ஆமை உலகின் மிகப்பெரிய ஆமை என அந்த சங் கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆமையின் நிறை மற்றும் அளவு ஆகியவைகளின் தகவல்களின் அடிப்படை யில் பார்த்தால், இதற்கு முன்னர் இருந்த மிகப் பெரிய ஆமைகளை விடவும் இந்த ஆமை இர ண்டு மடங்கு பெரியதென அவர் குறிப்பி ட்டுள்ளார்.

இந்த ஆமை விசேட விலங்காக கருதப்ப டுகின்றது. இது தொடர்பில் மேலதிக தகவல் களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆரா ய்ந்து பார்த்த அளவிற்கு உலக சாதனையாக பதிவாக கூடும் என அவர் மேலும் தெரிவி த்துள்ளார். (செ-11)

## முன்னாள்...

வரும் போராளியாக இருந்து உயிர் இழந் தமையால் விரக்தியில் காணப்பட்ட இவர் தனது குழந்தையின் எதிர்காலத்தை யோசிக் காமல் தூக்கிட்டு தற்கொலை செய் கொண்டு ள்ளார் என குடும்பத்தினர் கவலை வெளியி ட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஏறாவூர் பொலிஸாரால் சங்கலடி வைத்தியசாலை பிணவறையில் சடலம் பிரேத பரிசோதனை க்காக கொண்டு வைக்கப்பட்ட நிலையில் பிரேத மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக் கப்பட்டுள்ளது. (செ)

# மறிச்சுக்கட்டி,...

ஜனாதிபதியினால் வனப்பாதுகாப்புப் பிர தேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக உயர்மட்ட முஸ்லிம் தூதுக்குழு ஒன்று நேற்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்து உரை யாடிய போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

முஸ்லிம்கள் தரப்பில் முசலி மக்களுக்கு குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் காரண மாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி எடுத்து விளக்கிய பின்னர்,

உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளடக்கிய கூட்டம் ஒன்றை கூட்டி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு ஜனாதிபதியால் மேற்படி பணிப் புரை வழங்கப்பட்டுள்ளது.

வனபரிபாலனத் திணைக்களத்திற்கு உரிய காணிகள் வனஜீவராசிகள் திணைக் களத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென்ற தான் விடுத்த பணிப்புரை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்நிலையில், முசலிப் பிரதேசத்தில் வனப்பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத் தப்பட்டுள்ளதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி கண்டறிவதற்கு மூவர் கொண்ட குழு ஒன்றை நியமிப்பதற்கு தான் ஏற்கெனவே பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் ஜனா திபதி தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு முசலிப் பிரதேச காணி கள் வர்த்தமானி ஒன்றின் மூலம் வனப்பாது காப்புப் பிரதேசத்திற்குள் உள்ளடக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளி யிடப்பட்ட வர்த்தமானிப் பிரகடனத்தால் ஏற்ப ட்டுள்ள பாதிப்புக்கள் பற்றி விளக்கிய அமை ச்சர்களான றிஷாட் பதியுதீன், பைஸர் முஸ் தபா ஆகியோர்,

1990 ஒக்டோபரில் விடுதலைப் புலிக ளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது அவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் மற்றும் நிலங்கள் என்பவற்றை விடுவித்து நீதி கிடை க்க வழி செய்ய வேண்டுமென வலியுறுத்தி னர்.

பாதிப்புகள் பற்றி ஆராய்வதற்கு ஜனா திபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென அமைச்சர் றிஷாத் பதியுதீன் இதன் போது வலியுறுத்தினார்.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ்.எம்.நௌபல், குறிப்பிட்ட வர்த்தமா னிப் பிரகடனங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் கள் பற்றி விளக்கக்காட்சி மூலம் விளக்கமளி த்தார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

# அரசுக்கு அழு...

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வே றுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பாரிய மக்கள் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஜனநாயக போராளிகள் கட்சியினர் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட் டம் நேற்றுடன் 68ஆவது நாளை கடந்து தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

41 மீனவக்குடும்பங்களும் 97 விவசாய க்குடும்பங்களும் தமது சொந்த நிலத்திற்காக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது வாழ்வாதாரங்கள் அனைத்தை யும் இழந்துள்ள மக்கள் ஏழு வருடங்களாக பல்வேறு பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தநிலையில் மக்களின் தொடர் போரா ட்டம் நேற்றும் தொடர்ந்து இன்றும் தொடர்ச் சியாக இடம்பெற்று வருகின்றது. எனினும் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான தீர் மானமும் முன்வைக்கப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை பதினொரு மணியளவில் கேப்பாப்பிலவு போராட்ட இடத் துக்கு வருகைதந்த ஜனநாயக போராளிகள் கட்சியினர் மக்களின் போராட்டத்துக்கான தமது ஆதரவை நேரில் வழங்கியதோடு காணி விடுவிப்பு மற்றும் காணாமல் ஆக்க ப்பட்டோர், வேலையில்லா பட்டதாரிகள் பிரச் சினை, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி மாபெரும் போராட்டத்தை விரைவில் முன்னெடுத்து அரசுக்கு அழுத்த மொன்றை கொடுத்து பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். (செ-281)

# இலஞ்சம் பெற்ற...

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி குறிப்பிட்டுள்ளார்.

கையூட்டு தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்ய வேண்டுமாயின், 1954 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என வும் அவர் கூறியுள்ளார்.

முறைப்பாடுகள் தொடர்பில் இரகசிய தன்மை காக்கப்படும் எனவும் இலஞ்சம் ஊழல் விசா ரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந் திரசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

# இலங். கொடியுட...

கப்பட்டுள்ளதாக இந்திய மீனவர்களால் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் எல்லைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதால், அவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து கொண்டே செல் கின்றன.

எனவே, இதை தடுக்கும் நோக்கில் இல ங்கை - இந்திய அரசாங்கங்களுக்கு இடை யில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், நடுக்கடலில் தமிழக மீன வர்கள் எல்லை தாண்டாமல் இருக்கும் வகையில் எல்லைப் பலகையை இலங்கை அரசாங்கம் வைத்துள்ளது என தமிழக மீன வர்கள் மூலமாக அறியக்கிடைத்துள்ளது.

இலங்கையில் இருந்து 5ஆவது மணல் திட்டில் இலங்கை கொடியுடன் இந்தப் பலகை வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தனுஷ்கோடியில் இருந்து 5வது மணல்திட்டில் இந்திய அரசாங்கம் எல் லைப்பலகைவைத்துள்ளமைகுறிப்பித்தக்கது.(செ)

# உணவகத்தினு...

விடுதியினுள் நேற்றைய தினம் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் உணவக உரிமையாளர் உட்பட மூவர் படுகாயமடை ந்துள்ளனர்

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்றைய தினம் பிற்பகல் 4.15 மணி யளவில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு இளைஞர்கள் உணவகத்துக் குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த இளை ஞர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தி யும் வாளினால் வெட்டிவிட்டும் தப்பிச்சென்று ள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் உணவகத்தின் உரிமையாளரான 32 வயதுடைய சிவபா லன் சிவலக்ஷ்மன், ஆட்டோச் சாரதியான 24 வயதுடைய நாகசாமி நந்தன், வெளி நாடொன்றிலிருந்து இரண்டு தினங்களுக்கு முன்னர் நாடு திரும்பிய 22 வயதுடைய வேணுகோபால் சுகந்தன் ஆகியோர் படு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் வேணுகோபால் சுகந்தன் மேலதிக சிகிச்சைக்காக நேற்றைய தினமே யாழ்.போ தனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட் டுள்ளார்.

இவ்வாள்வெட்டுச் சம்பவம் தொடர் பாக மேலதிக விசார ணைகளை சாவகச் சேரிப் பொலிஸார் மேற் கொண் டு வருகின்றனர். (செ-9-30-89)

# நீர் மட்டம்...

நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள பகுதிக ளில் குறைந்தளவான மழை வீழ்ச்சியே பதி வாகியுள்ளதாக நீர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் வசந்த பண்டார பலுகஸ்வெவ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் இம்முறை சிறுபோக செய்கை முன்னெடுக்கப்படும் காணிகளுக்கு மட்டுப்படு த்தப்பட்ட அளவிலேயே நீரை விநியோகிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (செ)

# வெடிபொருட்கள்...

தனியாருக்கு சொந்தமான காணி ஒன் றின் கிணற்றை கடந்த 3 ஆம் திகதி உரி மையாளர்கள் சுத்தம் செய்தபோது, ஒரு தொகுதி வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஹலோ ரெஸ்ட் மீட்பு பணியாளர்களின் உத வியுடன் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட் டிருந்தது.

மேற்படி மீட்பு பணிகளை தொடர வேண் டிய சூழலில் பொலிஸாரால் அன்றைய தினம் இடைநிறுத்தி நீதிமன்ற அனுமதியை பெற்று நேற்றைய தினம் பணி தொடர்ந்தபோது அக்கிணற்றில் இருந்து மேலதிக வெடிபொரு ட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதில் ஆர்.பி.ஜி குண்டு ஒன்று, இரண்டு கைக்குண்டுகள், ஏறத்தாழ 4 ஆயிரம் துப்பாக்கி ரவைகள் மற்றும் அதனுடன் இணைந்த ஆயுத பொருட்கள் என்பன மீட் கப்பட்டுள்ளன. (செ-9)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்.
● வேறிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெறுதுகொள்ளப்படும்
● விரைவுரை நாடுகளிலும் தூரமிறுக்கமுமைகளிலும் அலுவலகங்கள் உ
● எம்மிடம் சேவையை பெற்றுக்கொள்வதனூடாக தங்கப்பதுமன் போட்
சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் மே 10 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம்.

வேலைவாய்ப்பு
Distributor's Training Administrators
A.S.M Managers
ஆகிய துறைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இயங்கிவரும் Dynamic கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் உள்ளதால் தாங்க ளும் O/L, A/L தகைமை இருப்பின் விண்ணப்பிக்கவும்.
20 பேர் மட்டும் தேவை. வயதெல்லை 18 -35
தொடர்பு :
0766781042, 0766668385

BG 358 வகை தரமான தூற்றிக் காயவைத்த சம்பா நெல் விற்பனைக்கு உண்டு

02.05.2017 அன்று எம்மால் விளம்பரப்படுத்தப்பட்டிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நெல் விளம்பரத்திற்கேற்ப குறித்த திகதிக்குள் எமது முகாமை மதிப்பிட்டுள்ள விலையிலும் குறைவான விலையிலேயே கூறுவிலை கிடைக்கப்பெற்றுள்ளமையினால் இதனை இரத்துச் செய்வ தோடு 06.05.2017 மீள்விளம்பரம் செய்கின்றோம்.

நல்ல முறையில் காயவிடப்பட்டு சுத்தமாக்கப்பட்டுள்ள BG 358 வகை சம்பா நெல் 1600 மூடைக்கு மேல் எமது களஞ்சியத்தில் விற்பனைக்காக களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது. இதனை பெற விரும்புவோர் நேரில் வந்து பார்வையிட்டு கொள்வனவு செய்ய விரும்பும் அதி கூடிய கூறு விலையினை சீல் வைத்து ஒப்ப மிட்டு எம்மிடம் ஒப்படைத்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நெல் அகற்ற முன் பணம் செலுத்தியாக வேண்டும். முழுவதும் எடுக்க வேண்டும்.

முடிவுத் திகதி:-10.05.2017- காலை 10.00 மணி

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம்:-0214923118, 0770604950

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை

365 நாட்களும்
72 மணி நேரத்தில் உலகின் எம்பகுதியிலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு கொழும்பிலுள்ள ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, பதிய மாதகரசபை கட்டடத்தொகுதி, ஸ்தானியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3516
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுஸ் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, மிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.